வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 28.04.2022 வியாழக்கிழமை | இதழ் : 143 | பக்கங்கள் : 16

# அனைத்து கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு இணங்குகிறேன்!

## கட்சி தலைவர்களுக்கு ஜனாதிபதி அறிவிப்பு

### நாளை விசேட கூட்டத்துக்கும் ஏற்பாடு!

கொழும்பு, ஏப்ரல் 28

பாராளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு கொள்கையளவில் தயாராக இருக்கிறார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி மற்றும் பாராளுமன்றில் சுயாதீன அணிகளாக செயல்படும் கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயம் சுட்

15

# என்னை பதவி விலகுமாறு ஜனாதிபதி கூறவில்லை - கூறப்போவதுமில்லை!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை




கொழும்பு, ஏப். 28

“பிரதமர் பதவியில் இருந்து விலகு மாறு ஜனாதிபதி என்னிடம் ஒரு போதும் குறிப்பிடவில்லை - குறிப் பிடப்போவதுமில்லை என்ற நம்பிக்கை உள்ளது. நாட்டை நெருக்கடியான நிலையில் வைத்து விட்டு பதவி விலக

15

# மிகக்குறைந்த விலையில் இலங்கைக்கு எரிபொருள்

## முன்வருகிறது ரஷ்ய அரசாங்கம் குணவன்ச தேரருக்கு அறிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 28

**“இலங்கைக்கு மலிவு விலையில் எரிபொருளை வழங்க ரஷ்ய பிரதிநிதிகள் எழுத்துமூலமாக அறிவித்துள்ளனர்” என்று வண. எல்லாவல குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் குணவன்ச தேரர் மேலும் கூறியவை வருமாறு,

“பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற உண்மையான ஆர்வமும் உறுதியும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந் தால் மூன்று நாட் களில் தற்போதைய நெருக்கடிக்கு

15

# நாடு முழுவதும் இன்று பணிப் புறக்கணிப்பு!

கொழும்பு, ஏப். 28

அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி நாடு முழுவதும் இன்று வியாழக்கிழமை பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை அனைத்து தொழில் சங்கங் களும் அறிவித் துள்ளன.

15

# தொழில்சங்க போராட்டம் த. தே. கூட்டமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 28

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை பதவி விலகக் கோரி இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள நாடு தழுவிய ஒருநாள் அடையாள வேலை நிறுத் தப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்ட

15

# பணிப் புறக்கணிப்புக்கு வடக்கிலும் முழுஆதரவு!

யாழ்ப்பாணம், ஏப். 28

நாடு தழுவிய ரீதியில் இன்று முன்னெடுக்கப் படவுள்ள தொழில்சங்கப் போராட்டத்துக்கு வடக்கு அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவை தெரிவித்துள்ளன.

15

## காலிமுகத்திடல் போராட்டம்:

# எகிறும் செலவுகளால் திணறுகிறது பொலிஸ்

கொழும்பு, ஏப். 28

காலிமுகத்திடல் போராட்டத்தில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸாரின் நாளாந்த உணவு செலவு மட்டுமே ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் என்று சிங்கள இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

15

# கோட்டாபயவும் மஹிந்தவும் ஒரேநேரத்தில் விலகவேண்டும்!

## சந்திரிகா அம்மையார் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 28

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை காப்பாற்றவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு சிறீ லங்கா பொதுஜன முன் னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் கோரி வரு கின்றனர். ஒருவரை மட் டும் பதவி விலகக் கோரும் இந்தச் சுயலாப அரசியல் கோரிக்கை ஏற்கத் தக்கது அல்ல. வீதி களில் இறங்கிப்

15

# அமெரிக்கத் தூதுவர் ஜூலி யாழ். பல்கலைக்கு விஜயம்!

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங் நேற்று புதன்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு சென்றிருந் தார்.

15

# முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்கள மக்களும் பங்கேற்கவேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் செல்வம் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 28

நாட்டில் இன ஐக்கியம் உருவாகியுள்ளதாக இருக்குமேயானால் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்கள, முஸ்லிம் மக்களும் கலந்துகொள்ளவேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் எதிர்கொண்டுள்ள சிக்கல் நிலைமைக்கு காரணமான ஆட்சியாளர்களை வீட்டுக்குச் செல் என காலிமுகத்திடல் தொடக் கம் நாடு பூராகவும் போராட்டம்

15

# “பாராளுமன்றுக்கு புதிய சபாநாயகர்!”

கொழும்பு, ஏப். 28

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன வுக்கு எதிராக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நம் பிக்கையில்லா பிரே ரணை கொண்டு வரப் படும். இதன் மூலம் புதிய சபாநாயகர் ஒருவர் நிய மிக்கப்படுவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர்

15



# இரணைமடுவில் அரசுக்கு எதிராக நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டம்!

கிளிநொச்சி, ஏப். 28

அரசுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் முன்பாக இடம்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகக்கூடாது

## உள்ளூராட்சி தலைவர்கள் முடிவு

கொழும்பு, ஏப். 28

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை இராஜிநாமா செய்யக்கூடாது என உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர்.

பிரதமருடன் அலரி மாளிகையில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மாவட்டத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஆகியோர் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ பெரும்பான்மை வாக்குகளால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் பிரதமர் என்றும் மக்களின் இறையாண்மைக்கு பிரதமர் தலைவணங்கினால் அவர் தொடர்ந்தும் அந்த பதவியில் நீடிக்க வேண்டும் எனவும் பிரதேச சபைகளின் தவிசாளர்களும் மேயர்களும் ஏகமனதாக தெரிவித்தனர்.

இதற்கமைய மேற்படி தீர்மானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துத்து கருத்துத் தெரிவிக்கவும் பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் மேயர்கள் தீர்மானித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ என்ற பெயரையும் உருவப்படத்தையும் பயன்படுத்தி பாராளுமன்றத்திற்கு வந்த ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு பிரதமரை பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும் உண்டு என கூறிய உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இத்தருணத்தில் அரசாங்கத்தை சீர்குலைத்து சுயாதீனமாக செயற்படுவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தால் மட்டுமே வெற்றிகொள்ள முடியும். இவ்வாறான சவால்களை வெற்றிகொண்ட வரலாறு இருக்குமானால் அது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மாத்திரமே எனவும் குறிப்பிட்டனர். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

சஜித் பிரேமதாசா பற்றி இந்த ஊர்க்குருவியிடம் பல கேள் விகள் உண்டு. அவரிடமே கேட்கவும் இருக்கின்றேன். ஆனால், அதற்கு முன்னதாக அண்மையில் பிபிசி தமிழுக்கு வழங்கிய பேட்டியில் அவரே சில விடயங்களை கேள்விக்கு உட்படுத்தி யிருக்கின்றார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை மாத்திரமல்ல, நிறைவேற்று பிரதமர் ஆட்சிமுறையையும் தான் எதிர்ப்பதாக அந்தப் பேட்டியில் தெரிவித்திருக்கும் சஜித், ஒருவரிடம் அதிகாரங்கள் செல்வதை தான் எதிர்ப்பதாகவும், 'கண்காணிப்புகள் இருப்பதை உறுதி செய்வோம், ஒற்றைப்படையாக முடிவுகள் எடுக்கும் முறையை எதிர்ப்போம். உண்மை, தரவுகள், அறிவியல் இவை சார்ந்து முடிவெடுத்தல் முறையை, நிபுணர்களின் கருத்தைக் கேட்டு முடிவெடுக்கும் முறையை, அனைத்தையும் உள்ளடக்கிய முடிவெடுத்தல் முறையை கொண்டுவருவோம்' என்றும் தெரி வித்திருக்கிறார்.

நல்ல விடயம்தான்.

இந்த நாடு தனி ஒருவரின் முடிவுகளாலேயே கடந்த பல தசாப்தங்களாக ஆளப்பட்டு வந்திருக்கின்றது. அதன் விளைவுகளையே இப்போது அறுவடை செய்துகொண்டிருக்கின்றோம்.

ஆனால், இந்த முறையை மாற்றவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் அல்லது விரும்புகின்றவர்கள், இன்று தத்தமது நிறுவனங்களுக்குள், கட்சிகளுக்குள் அதனைச் செய்கின்றார்களா என்பதை முதலில் தத்தமக்குள் கேட்டுப்பார்க்கவேண் டாமா? இன்று நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியை தீர்ப்பது எனில் அது, நமது நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தின் மூலமே செய்யப்பட வேண்டும்.

இன்றைய நெருக்கடியை தீர்க்க, நாட்டை மக்களை நேசிக் கின்ற ஒவ்வொருவரும், உடனடியாக நாம் என்ன செய்யவேண் டும் என்று சிந்திக்கவேண்டும்.

இடைக்கால அரசு ஒன்றை அமைத்து, அந்த அரசு நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு தீர்வுகாண உடனடியாக என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதனைச் செய்யவேண்டும். அதற்கு இன்றைய நிறைவேற்று ஜனாதிபதி முறை - அல்லது ஜனாதிபதி தடையாக இருக்கின்றார் என்றால், அதனை மக்கள் முன்வைத்து, தாம் செய்ய நினைப்பது சரியானது என்பதையும் அதனை ஜனாதிபதி தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி தடுக்கிறார் என்பதையும் மக்கள் மத்தியில் முன்வைக்கவேண்டும்.

அதைவிடுத்து, உடனடியாக பொதுத் தேர்தல் ஒன்றுதான் வேண்டும், அப்போதுதான் நாங்கள் அவர்கள் கதிரையில் உட்காரலாம் என்று அடம்பிடிப்பது, நாட்டுப்பற்று ஆகாது.

இடைக்கால அரசு ஒன்று அமைந்து, அதனை வழிநடத்திச் செல்பவர், இன்றைய நெருக்கடியை சரியாகக் கையாண்டு அதனை சீர்செய்துவிட்டால், அவர் மக்களின் தலைவர் ஆகிவிடுவார் என்று கணக்குப்போட்டுக்கொண்டு அரசியல் செய்வதும் நல்ல தலைமையாகிவிட முடியாது. முதலில் இடைக்கால அரசு அமைக்க ஜனாதிபதி சம்மதம் தெரிவித் துள்ள நிலையில், அதனை நோக்கியே இன்று அரசியல்கட்சிகள் நகரவேண்டும்.

நிபுணர்களின் ஆலோசனையைக் கேட்டு ஆட்சி அமைப்பேன் என்று கூறும் சஜித், முதலில் தனது கட்சிக்குள் இருப்பவர்களின் ஆலோசனையை, கருத்தைக் கேட்டு ஒவ்வொரு நகர்வையும் செய்யவேண்டும்.

சஜித் பிரேமதாசா, பிபிசிக்கு வழங்கிய பேட்டியிலிருந்து இரண்டு கேள்விகளுக்கு அவர் வழங்கிய பதிலை பார்ப்போம்.

கேள்வி: 13ஆவது சட்டதிருத்தம் குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்: நாங்கள் 13ஆவது சட்டதிருத்தத்தை ஆதரிக்கிறோம். அந்த சட்டதிருத்தம் எதுவாக இருக்கிறதோ, அதை அவ்வாறே ஆதரிக்கிறோம். கவலைப்படாதீர்கள். நாங்கள் இரட்டை நாக்கு கொண்டவர்கள் அல்லர். அங்கு ஒன்றும், இங்கு ஒன்றும் பேசுபவர்கள் அல்லர். நாங்கள் எங்கள் கொள்கையை தீவிரமாக கடைப்பிடிப்பவர்கள். எங்களின் அரசியலமைப்பின் ஒற்றை யாட்சி தன்மையை 13ஆவது சட்டதிருத்தம் பாதிக்காது. இதை உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது. என் தந்தையும் 13ஆவது சட்ட திருத்தை ஆதரித்தார். அவரது மகனாகிய நானும் அதையே தான் செய்வேன்.

கேள்வி: 13ஆவது சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவீர்கள், அப்படித்தானே?

பதில்: நாங்கள் 13ஆவது சட்டதிருத்தம் தற்போது எவ்வாறு இருக்கிறதோ, அதை அப்படியே அமுல்படுத்துவோம்.

இந்த கேள்வி பதில் மூலம் அவர் தெளிவாக ஒரு விடயத்தை சொல்லியிருக்கின்றார். பதின்மூன்று இன்றிருக்கின்ற நிலையில் அமுல்படுத்துவாராம். அதன்மூலம் அவர் சொல்லவருவது, பதின்மூன்றாவது திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னனர், அவரது தந்தை, மாவட்ட செயலர்களையும் மாவட்ட அர சாங்க அதிபர்களின் அதிகாரங்களையும் மத்திய அரசின்கீழ் கொண்டுவந்து செய்த திருத்தம் உட்பட, பதின்மூன்றை பலவீனப்படுத்த கொண்டுவரப்பட்ட திருத்தங்களை உள் வாங்கி, 'இன்று' பதின்மூன்று எப்படியிருக்கின்றதோ அதனை அப்படியே அமுல்படுத்துவேன் என்பதுதான்.

நேற்று மாகாண சபையின் கீழிருந்த கல்லூரிகளை எல்லாம் தேசிய பாடசாலைகளாக்கி, அவற்றை மாகாண நிர்வாகத்திடமிருந்து பறித்தெடுத்தது உட்பட, பழையவை எல்லாம் போனது போனது தான், இன்றிருக்கின்ற அதிகாரங்களை அப்படியே அமுல்படுத்துவேன் என்கின்றாரா? என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

முதலில் பதின்மூன்றை - அதிலுள்ள பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களையும் அமுல்படுத்துவேன். பதின்மூன்றுக்கு பின்னர் அதிலிருந்து சில அதிகாரங்களை களைவதற்காக கொண்டுவரப்பட்ட திருத்தங்களிலுள்ளவற்றையெல்லாம் ரத்துச் செய்து, பதின்மூன்றை முழுமையாக மீண்டும், ஒரு திருத்தமாக கொண்டுவருவாரா என்பதையும் அவரிடம் கேட்டிருக்கவேண்டும். ஆனால், பேட்டியாளர் கேட்க மறந்துவிட்டார்.

விரைவில் அவரிடமே கேட்போம்.

- ஊர்க்குருவி

## அருளாசியுரை

யாழ்ப்பாணம், ஏப். 28

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனையை நடத்துகிறது.

இந்த வரிசையில், இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு கோப்பாய் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ பா. சோமசுந்தரக்குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)



## வெற்றிலைக்கேணியில் மழலை பூங்கா திறப்பு!

வடமராட்சி, ஏப். 28

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி- கட்டைக்காட்டில் இயற்கையோடு இணைந்ததாக அமைக்கப்பட்ட மழலை பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

இராணுவத்தின் 55ஆவது படைப்பிரிவினரால் அமைக்கப்பட்ட இந்த பூங்காவை, யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பா பிரதம விருந்தினராகப் பங்கேற்று திறந்து வைத்தார்.

இயற்கையாக அமைந்த பனங்கூடலில் சிறார்களின் சிந்தனைகளை வளர்க்கும் நோக்கில் மழலை பூங்காவை சிறார்களிடம் கையளிப்பதாக இதன்போது தளபதி தெரிவித்தார். (ஐ-2)



இயக்கச்சி – மல்வில் கிருஷ்ணன் ஆலய அறங்காவலர் கார்த்திகேசு சின்னத்தம்பி நினைவு அறக்கட்டளை அங்குரார்ப்பண வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது "சுதர்சனம்" என்ற ஆலய வரலாற்று நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பிரதி பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் டயலொக் நிறுவனத்தின் வடக்கு – கிழக்கு பிராந்திய முகாமையாளர் தியாகராஜா சிவகுகன் அறக்கட்டளையை ஆரம்பித்து வைத்ததுடன் நூலையும் வெளியிட்டு வைத்தார்.

ஈழநாடு
Eelanadu
28.04.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## முகம் காட்டும் சிங்கள - பௌத்த தேசியம்?

சிங்கள - பௌத்த தேசியவாதம் உறைநிலையிருக்கின்றது - அது சரியான தருணத்தில் வெளிப்படுமென்று - ‘ஈழநாடு’ ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தது. ஒரு சில நாட்களிலேயே, எமது எதிர்வுகூறல் சரியென்பதை நிரூபிக்கும் வகையில் குணதாச அமரசேகர வெளியில் முகம் காட்டியிருக்கின்றார். அதாவது, அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடாதென்று வலியுறுத்தியிருக்கும் - அமரசேகர, அரசியலமைப்பு மாற்றமென்னும் பெயரில், 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கான சதி இடம்பெறாலாமென்று குறிப்பிட்டிருக்கின்றார். இந்தியா போன்ற சக்திகள் இதில் தலையீடு செய்யலாமென்றும் அவர் சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகளை எச்சரித்திருக்கின்றார்.

13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமலாக்கும் நோக்கில், புதிய அரசியலமைப்பு தொடர்பில் பேசப்பட்டு வந்த நிலையில்தான், ராஜபக்ஷ முகாம் பாரிய அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது. ஜனாதிபதியை வீட்டுக்கு செல்லுமாறு கோரி, தொடர்ந்தும் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகக் கோரியும் கட்சிக்குள் எதிர்ப்புக்கள் எழுந்திருக்கின்றன. இந்த நிலையில்தான், அமைதியாக இருந்த, குணதாச அமரசேகர போன்ற இலட்சிய இனவாதிகள் வெளியில் வருகின்றனர். அவர்களால் நேரடியாக ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் நோக்கில் கருத்துக்களை கூற முடியாத நிலையில், தமிழர் விரோத அரசியலை முன்னிறுத்துவதன் மூலம், எதிர்காலத்தில் அதிகாரத்துக்கு வரக்கூடியவர்களுக்கு இப்போதே கடிவாளமிட முற்படுகின்றனர். சஜித் பிரேமதாஸ, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசியிருக்கும் நிலையில்தான், குணதாச அமரசேகர 13ஐ கையிலெடுத்துக் கொண்டு வெளியில் வந்திருக்கின்றார். உறைநிலையிருக்கும் சிங்கள-பௌத்த தேசிவாத சக்திகளை உற்சாகப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே அமரசேகரவின் அறிக்கையை நாம் நோக்க வேண்டும்.

21ஆவது திருத்தச்சட்டம் தெடர்பில் விவாதங்கள் இடம்பெற்றுவரும் சூழலில்தான், 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிரான சுலோகங்களுடன், குணதாச அமரசேகர போன்ற சிங்கள-பௌத்த தேசியவாத சக்திகள் அரங்குக்கு வர முயற்சிக்கின்றனர். ஜனநாயகத்தை முன்னிறுத்தி சிங்கள இளைஞர்கள் காலிமுகத்திடலில் ஒன்றுதிரண்டு வருகின்ற சூழலில், ஆகக் குறைந்தது அரசியலமைப்பில்கூட தமிழர்களுக்கு சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுவிடக் கூடாதென்னும் விஷப் பிரசாரங்களை சிங்கள-பௌத்தம் கையிலெடுக்க முற்படுகின்றது. இந்த நாட்டை எந்த வகையிலும் முன்நோக்கி கொண்டு சென்றுவிடக் கூடாதென்னும் நோக்கில்தான், சிங்கள-பௌத்த சக்திகள் திட்டமிட்டு செயல்பட்டிருக்கின்றன. இதுதான் இதுவரையான சிங்கள அரசியல் வரலாறு.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை சரிசெய்வதற்கு எந்தவொரு வேலைத்திட்டமுமற்ற சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகள், தமிழர்களுக்கு எதிரான அரசியல் சிந்தனையில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தயாராக இல்லை என்பதையே, குணதாச அமரசேகரவின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

சிங்கள மக்கள் மத்தியில், குரணதாச அமரசேகர போன்றவர்கள் மிகவும் சொற்பமானவர்கள்தான், ஆனால் இறுதியில், சொற்பமான சிங்கள-பௌத்த கருத்தியலாளர்களின் நிலைப்பாடுகள்தான் வெற்றி பெறுகின்றன. இதுதான் கடந்த எழுபது வருடங்களுக்கும் மேலாக இலங்கைத் தீவில் கோலோச்சுகின்றது. சிங்கள-பௌத்த தேசியவாத கருத்துநிலை கேள்விக்குள்ளாக்கப்படாத வரையில், இலங்கைத் தீவின் அரசியல் கட்டமைப்பில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை.

தமிழ் மக்கள் மத்தியில் யதார்த்தபூர்வமாக சிந்திக்கும் தரப்புக்களையும் இவ்வாறான சிங்கள-பௌத்த தேசியவாத சக்திகளின் செயல்பாடுகள் சோர்வையடைய செய்கின்றன. இந்த வரலாற்று பின்னணியில்தான், தனிநாட்டுக்கான கோரிக்கை மேலேழுந்தது. தமிழ் மக்கள் மத்தியில் யதார்த்தபூர்மான சிந்தனைகள் மேலெழுந்து வருகின்ற சூழலில், சிங்கள- பௌத்த தேசியவாத சக்திகளை கட்டுப்படுத்தக்கூடிய, பொறிமுறை தொடர்பிலேயே சிங்கள தாராளவாத அரசியல் சக்திகள் சிந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் எத்தனை காலிமுகத்திடல் ஒன்றுகூடல்களாலும் பயனில்லை.

# அலரி மாளிகை முன்பாக ‘மைனா கோ கம’!

அலசுவது இராஜதந்திரி

*அரசின் தவறான பொருளாதார கொள்கைகளினால் ஏற்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றங்களை கண்டித்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பதவி விலக வேண்டுமென கோரும் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம் பதினேழு நாட்களையும் கடந்து இடம் பெற்றுவருகின்றது.*

*இந்த ஆர்ப்பாட்டத்தின் மற்றோர் அங்கமாக காலி முகத்திடல் ஆர்ப்பாட்ட மையத்திலிருந்து ஏறத்தாழ ஒருமைல் தொலைவில் தெற்கே அமைந்துள்ள பிரதமரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகைக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடியுள்ளனர். அத்துடன் காலிமுகத்திடலில் “கோட்டா கோ கம” என்று ஒரு கற்பனைக் கிராமமொன்றை உருவாக்கியது போல அலரி மாளிகைக்கு முன்பாக “மைனா கோ கம” என்ற பெயரில் ஒரு புதிய கற்பனைக் கிராமமொன்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் உருவாக்கியுள்ளனர்.*

*“மைனா கோ கம“ என்பதில் “மைனா” என்ற சொல் தள்ளாத வயது நிரம்பிய கிழவனை சிங்களத்தில் வேடிக்கையாக குறிப்பிடுவதாக இருக்கின்றது. எனவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தற்போது படிக்கட்டுகளில் ஏறி இறங்குவதற்கும், தொலைதூரம் நடப்பதற்கும் தமது மெய்ப்பாதுகாவலர்களின் உதவியையே நாடி நிற்கின்றார். இதன் காரணமாகவே மஹிந்தவின் வயோதிபத்தை மையப்படுத்தி அவரது உத்தியோகபூர்வ இல்லம் முன்பாக “மைனா கோ கம” என்ற மற்றொரு கற்பனைக்கிராமம் ஆர்ப்பாட்டக்காரர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.*

*கற்பனைக்கிராமங்களான “கோட்டா கோ கம” காலிமுகத்திடலிலும், “மைனா கோ கம” அலரிமாளிகைக்கு முன்பாகவும் அமைக்கப்பட்டுள்ளதை நோக்கும்போது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு எதிரான எதிர்ப்பை ஆர்ப்பாட்டக்காரர்கள் நாளுக்கு நாள் வலுப்படுத்தி வருவதையே அவதானிக்க முடிகின்றது.*

*அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வலுவடைந்துள்ள நிலையில் கொழும்பிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில பத்திரிகையொன்றுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தற்போதைய நாட்டு நிலவரம் குறித்து நேற்றைய தினம் வழங்கியுள்ள பேட்டியில் “பதவியிலிருந்து விலகுவது தற்போது சாத்தியமாகாது. ஏனெனில், மக்களின் ஆணையைப் பெற்றே நாம் ஆட்சிக்கு வந்தோம். எம்மை ஒரு தேர்தல் மூலமாகவே ஆட்சியிலிருந்து அகற்ற முடியுமே தவிர ஆர்ப்பாட்டங்களால் அல்ல,“ என்று கூறியுள்ளார்.*

*“மக்களுக்கான பாதுகாப்பான சூழலை யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து உருவாக்கியிருந்தோம். இதன்மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் முதலீடுகளை முன்னெடுக்கவும் வழியமைத்தோம்” என்று பிரதமர் மஹிந்த தமது ஆங்கில பத்திரிகை பேட்டியில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.*

*யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த விடயத்தையே 2009ஆம் ஆண்டு முதல் தம்மையும் தாம் சார்ந்தவர்களையும் அரசியலில் தப்பவைக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ*



*இடையறாது கூறிவருகின்றார். ஆனால், யுத்தம் முடிவுக்கு வந்த கடந்த பதின்மூன்று வருட காலத்தில் எவ்வித காத்திரமான வெளிநாட்டு முதலீடுகளும் நாட்டுக்குள் வரவில்லை. மாறாக நாட்டை சீனாவுக்கு அடைமானம் வைக்கும் வகையில் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாகவே நாடு தற்போது அதல பாதாளத்தினுள் வீழ்ந்துள்ளது.*

*யுத்தம் முடிவுற்றதுமே அரிய வாய்ப்புகள் நாட்டை முன்னேற்ற அரச தரப்பினருக்குக் கிடைத்திருந்தன. ஆனால், அந்த வாய்ப்புகளையெல்லாம் தவறவிட்டதோடு சீனாவையே முழுமையாக நம்பிய ஒருநிலையே காணப்பட்டிருந்தது.*

*அத்துடன், நாட்டின் திறைசேரியில் அமெரிக்க டொலர்கள் கண்மூடித்தனமாக எடுக்கப்பட்டு நாட்டு நலன் கருதாது தமது சொந்த நலன்களுக்காகவும் வெளிநாடுகளில் தமது வர்த்தக, கைத்தொழில் முதலீடுகளை மேற்கொள்ளவுமே திறைசேரியின் அமெரிக்க டொலர்கள் பயன்படுத்தப்பட்டதன் விளைவாகவே நாடு தற்போதைய மிக இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு மக்களையும் கிளர்ந்தெழ வைத்துள்ளது.*

*2009ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டின் ஈடேற்றத்துக்கு வடக்கு - கிழக்கு யுத்தமே இடையூறாக இருந்ததென ராஜபக்ஷ தரப்பினர் தெரிவித்திருந்தனர். ஆனால், யுத்தம் முடிவுக்கு வந்து தற்சமயம் பதின்மூன்று வருடங்களாகியுள்ள போதிலும் பொருளாதார வளர்ச்சிக்குரிய நல்ல திட்டங்களை வகுக்காது நாட்டை பின்னடைய வைத்ததோடு கோவிட் -19 வியாதியின் தாக்கம் நாட்டை நிலைதளர வைத்துள்ளதென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது கொழும்பு ஆங்கில பத்திரிகைப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.*

*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பு ஆங்கில பத்திரிகைக்கான பேட்டியையும் அதில் அவர் அரசியலில் உள்ள தமது சகோதரர்களை யும், புதல்வர் நாமல் ராஜபக்ஷவையும் வக்காலத்து வாங்க முற்படுவதை நோக்கும் போது “வீழ்ந்தும் மீசையில் மண் படவில்லை“ என்று குறிப்பிடுவது போலவே இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**
பேச்சால் பிறரை கவர்வீர்கள். சொத்து பிரச்னை முடிவுக்கு வரும்.நீண்ட நாளாக தள்ளிப்போன செயல்கள் இன்று சாதகமாக முடியும். வெளிநாட்டு பயணம் குறித்து இன்று தீர்மானிப்பீர்கள்.

**இடபம்**
மற்றவர்களால் நன்மை ஏற்படும். உற்சாகமான நாள்.எதிர்பார்த்து இருந்த நல்ல செய்தி இன்று வீடு தேடி வரும்.பாஸ்போர்ட், விசா கிடைக்கும். கல கலப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்**
சிறு சிறு சங்கடங்கள் நேர்ந்தாலும் சமாளிக்கும்படி இருக்கும்.பழைய நண்பர்களை சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.பணியிடத்தில் பாராட்டுப் பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம்**
எதிர்பாராத நன்மை வரும். தந்தையால் மகிழ்ச்சி உண்டு.உங்களை யாரேனும் தவறு செய்யத் தூண்டினால் அதை மறுக்கவும். எங்கும் எதிலும் கவனம் தேவை. அதிகம் பேச வேண்டாம்.

**சிம்மம்**
வெளிநாட்டுப் பயணம் உறுதியாகும். உங்களின் அழகு கூடும்.பொழுதுபோக்கு விஷயங்களில் கலந்து கொள்வீர்கள். மகிழ்ச்சி கூடும்.மேற்படிப்பு பற்றித் தீர்மானிப்பீர்கள். சுபச்செலவு உண்டு.

**கன்னி**
பெற்றோருக்கு தொழிலில் நல்ல திருப்பம் ஏற்படும். பணியிடத்தில் பொறுப்பான பதவி உங்களைத்தேடி வரும். தொழிலில் லாபம் அதிகரிப்பதால் செயலில் மெத்தனம் வேண்டாம்.

**துலாம்**
அறிமுகம் இல்லாத நட்பால் நன்மையும் லாபமும் ஏற்படும்.நண்பரால் உங்களுக்கும், உங்களால் அவருக்கும் நலம் விளையும்.இன்று மனதில் மகிழ்ச்சியும் குதூகலமும் காணப்படும்.

**விருட்சிகம்**
தந்தை வழி உறவினர் மூலம் நன்மை நிகழும் நாள்.சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.கடந்த சில நாளாக முயற்சித்து வந்த செயல் இன்று கைகூடும்.

**தனுசு**
பிறரிடம் இருந்து புதிய செயல்களை கற்றுக்கொள் வீர்கள். உங்களால் நன்மை அடைந்தோர் நன்றி பாராட்டுவர்.புதிய வீடு வாங்குவீர்கள். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**மகரம்**
உடல் நலனில் கவனம் தேவை. தடைகளைச் சமா ளிப்பீர்கள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும்.எதிலும் தடை இருந்தாலும் முடிவில் வெற்றி உண்டாகும்.

**கும்பம்**
குடும்பத்தில் அமைதியை கையாளுவீர்கள். நிம் மதி கூடும்.கலைத்துறையைச் சார்ந்தவர்களுக்கு பெருமையும், பாராட்டும் கிடைக்கும்.நண்பர் மூலம் குடும்பத்திற்கு நன்மை ஏற்படும் நாள்.

**மீனம்**
பணியிடத்தில் ஏற்பட்ட தவறுகளைச் சரிசெய்வீர்கள். தாயாரின் ஆசியைப் பெறுவீர்கள். தெய்வ பலம் கூடும்.குடும்பத்துடன் கோயிலுக்கு சென்று வருவீர்கள். நிம்மதி காணும் நாள்.

# தஞ்சாவூரில் தேரில் மின் பாய்ந்து 11 பேர் மரணம் 14 பேர் படுகாயம்!

தஞ்சாவூர், ஏப். 28

தமிழ்நாடு - தஞ்சாவூர் அருகே களிமேடு கிராமத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற தேர்த் திருவிழாவில் மின்சாரம் தாக்கியதில் 11 பேர் பலியாகினர். அத்துடன், 14 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



தஞ்சாவூர் - பூதலூர் சாலையில் 4 கி.மீ. தொலைவில் உள்ள களிமேடு கிராமத்தில் 150 ஆண்டுகளுக்கு முன்பு அப்பர் மடம் அமைக்கப்பட்டது.

இந்த மடத்தில் ஆண்டு தோறும் சித்திரை மாத சதய நட்சத்திர நாளில் அப்பர் சதய விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழக்கம். இதன்படி 94ஆம் ஆண்டாக மூன்று நாள் அப்பர் சதய விழா நேற்று தொடங்கியது.

வெகு விமரிசையாக நடைபெற்று வந்த இத்திருவிழாவில் இரவில் மின் அலங்கார தேர் புறப்பாடு தொடங்கியது. இதில் அப்பர் படம் வைத்து இழுத்து வரப்பட்டது. தொடர்ந்து களிமேடு கிராமத்திலுள்ள நான்கு வீதிகளிலும் தேர் வலம் வந்தது.

அதிகாலை 3.15 மணியளவில் கீழைத் தெருவிலிருந்து முதன்மை சாலைக்கு வந்த தேர் திருப்பத்தில் திரும்பியபோது, மேலே சுமார் 30 அடி உயரத்தில் உள்ள உயரழுத்த மின் பாதையில் தேரின் அலங்கார தட்டி உரசியது.

இதனால் தேரை இழுத்து வந்த மக்கள் மீதும், சுற்றி இருந்தவர்கள் மீதும் மின்சாரம் பாய்ந்தது. இதில் களிமேடு கிராமத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி, தமிழக முதல் மு. கா. ஸ்டாலின் உள்ளிட்ட சகல தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# ஜெயலலிதா மரண விசாரணை; இறுதி அறிக்கை தயாராகிறது!

## - ஜூனில் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்படும் -

சென்னை, ஏப். 28

ஜெயலலிதா மரணம் குறித்து கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக விசாரித்து வந்த ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணை நிறைவு பெற்றுள்ளது. தமிழக அரசிடம் விசாரணை அறிக்கை வரும் ஜூன் மாதம் வழங்கப்படவுள்ளது.



முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கடந்த 2016 டிசெம்பர் 5ஆம் திகதி காலமானார். அவரின் மரணம் குறித்து விசாரிக்க, உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.ஆறுமுகசாமி தலைமையில் 2017 செப். 25ஆம் திகதி ஆணையம் அமைக்கப்பட்டது.

இந்த ஆணையம் இதுவரை 159 பேரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. சுமார் நான்கரை ஆண்டுகளாக நடந்து வந்த விசாரணை நேற்று முன்தினத்துடன் நிறைவுபெற்றதாக ஆறுமுகசாமி ஆணையம் தரப்பில் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இந்நிலையில், இறுதி விசாரணை அறிக்கை தயாரிக்கும் பணியை ஆணையம் நேற்று தொடங்கியது. இந்த அறிக்கையை ஜூன் 24ஆம் திகதிக்குள் தமிழக அரசிடம் தாக்கல் செய்ய ஆணையம் திட்டமிட்டுள்ளது. (ஐ)

# இஸ்லாமியர்களை வாக்குவங்கியாகவே ஏனைய கட்சிகள் பயன்படுத்துகின்றன

## தமிழக பாரதிய ஜனதா கட்சி சாடல்

சென்னை, ஏப். 28

பாரதிய ஜனதா கட்சியை தவிர மற்ற கட்சிகள் இஸ்லாமியர்களை வாக்கு வங்கியாக பயன்படுத்துகின்றன என்று அந்தக் கட்சியின் தமிழக தலைவர் கே. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் பா. ஜ. க. சார்பில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நடந்தது. இதில், கே.அண்ணாமலை இஸ்லாமியர்களுடன் அமர்ந்து நோன்பு கஞ்சி அருந்தினார். பின்னர் அவர் பேசுகையில்,

பாரதிய ஜனதா கட்சியின் சித்தாந்தத்தை புரிந்து கொண்டவர்களுக்கு இஸ்லாமியர்கள் இந்த கட்சியின் அங்கமாக வாழ்ந்து கொண்டிருப்பது புரியும். பா. ஜ. கவில் உள்ள இஸ்லாமியர்களுக்கு தேசியம், நாம் கூறும் இந்துத்துவாவை பற்றி முழுமையாக தெரியும். இந்த கட்சியில் இஸ்லாமியர்களுக்கு இடம் உண்டு. முழுமையான பங்கு உண்டு.

எந்த காரணத்துக்காகவும் நானோ இஸ்லாமியர்களோ தாங்கள் வணங்கும் கடவுளை ஒருபோதும் விட்டுக்கொடுத்தது கிடையாது. இந்தியாவில் அவரவர் மத கோட்டுபாடுபடி கடவுளை வழிபட்டு வருகின்றோம். உண்மையான இந்தியா இதுதான். அந்த இந்தியாவைதான் பா. ஜ. க. விரும்புகிறது.

மற்ற அரசியல் கட்சிகள் இஸ்லாமியர்களை வாக்கு வங்கிகளாக பயன்படுத்தி வருகின்றன. இந்துகளையும் இஸ்லாமியர்களை எதிரும்புதிருமாக வைத்து அரசியல் நடத்தி வருகின்றன. பிரதமர் மோடி அதை உடைத்து இஸ்லாம் பெண்களின் பாதுகாப்பு, சுதந்திரத்துக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து உறுதி செய்து வருகிறார்.

இஸ்லாம் மதத்தில் மட்டுமே இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுக்கிறார்கள். பா. ஜ. க. யாருக்கும் எதிரான கட்சி கிடையாது - என்றார். (ஐ)

# பஸில் ராஜபக்ஷவுடன் சஜித் அணி ஒப்பந்தம்!

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

**கொழும்பு, ஏப். 28**

**அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில் லாப் பிரேரணையை கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள தாமதம், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்துக்கு இடையிலான ஒப்பந்தமாக இருக்கலாம் என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தினார்.**



எதிர்க்கட்சி நம்பிக்கையில் லாப் பிரேரணையை கையளிப்பதற்குத் தயாராகி பல வாரங்கள் கடந்துவிட்டதாகவும் இப்போது அதைச் செய்வதற்கான உற்சாகம் அவர்களிடம் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

பஸில் ராஜபக்ஷவுடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒப்பந்தம் செய்துள்ளதா என நாங்கள் சந்தேகிக்கிறோம். பெரும்பான்மை மக்களின் கோரிக்கையின்படி அரசாங்கத்தை வெளியேற்றி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதில் தாமதம் ஏற்பட்டதன் பின்னணியில் சில இரகசியத்தன்மை இருப்பதாக நான் உணர்கிறேன்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி எந்த ஆர்வத்தையும் காட்டவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தற்போது அதற்கு எதிராக பேசுகிறார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் யார் பிரதமராக வருவார்கள் என்பது குறித்து எங்களுக்கு கவலை இல்லை. ஆனால் இந்த அரசாங்கத்தை வெளியேற்றுவதே எங்களுக்கு விருப்பம்-என்றார். (அ)

# சகல கப்பல் கட்டணங்களையும் டொலரில் செலுத்துமாறு பணிப்பு

கொழும்பு, ஏப். 28

அனைத்து கப்பல் கட்டணங்களையும் டொலரில் செலுத்துமாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் பிரமித் பண்டார தென்னக்கோன் துறைமுக அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமெரிக்க டொலர்களில் செலுத்தப்படவேண்டுமென அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனூடாக அதிகார சபையின் வருடாந்த வருமானம் 100 மில்லியன் அமெரிக்க டொலர் களை தாண்டும் என துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# 4,860 ரூபாவாக உயர்ந்த லிட்ரோ எரிவாயு விலை

கொழும்பு, ஏப். 28

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் (12.5 கிலோ) விலை 4 ஆயிரத்து 860 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக லிட்ரோ 12.5 கிலோகிராம் எரிவாயுவின் புதிய விலை 2,675 ரூபாவாகவும், 5 கிலோ லிட்ரோ எரிவாயுவின் விலை 1,071 ரூபாவாகவும், 2.3 கிலோ எரிவாயு கொள்கலனின் விலை 506 ரூபாவாகவும் காணப்பட்டது.

இதேவேளை, கடந்த 22 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் 12.5 கிலோ எரிவாயு கொள்கலன் விலையை 5175 ரூபாவாக அதிகரிக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்திருந்தது.

எனினும், பின்னர் அதற்கு அனுமதி வழங்கமுடியாது எனத் தெரிவித்து குறித்த விலை அதிகரிப்பை நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பணம் கொடுக்க மறுத்த மருத்துவரை கத்தியால் குத்திக் கொன்றார் யாசகர்

கொழும்பு, ஏப். 28

பணம் கொடுக்க மறுத்த மருத்துவர் ஒருவரை யாசகர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு தலங்கமவில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பல்பொருள் அங்காடிக்கு அருகில் ஒருவர் விழுந்து கிடந்த நிலையில் தலங்கம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாலபே, பொத்துஅராவ வீதியில் வசிக்கும் 57 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

பல்பொருள் அங்காடியில் இருந்து வெளியேறும்போது அருகில் இருந்த யாசகருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில் யாசகர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார் உடன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகவேண்டும்

## சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே கோரிக்கை

கொழும்பு, ஏப். 28

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை பதவி விலகி புதிய ஜனாதிபதி மற்றும் அமைச்சரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கீழ் அரசாங்கத்தை அமைக்க



பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகள் தயாரில்லை.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் மிகவும் உணர்வுபூர்வமாக உள்ளேன். நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன் -என்றார். (அ)

# அமைச்சுப் பதவியேற்று மக்களை ஏமாற்றியுள்ளார் காதர் மஸ்தான்

## மயூரன் பகிரங்க குற்றச்சாட்டு

வவுனியா, ஏப். 28

பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அமைச்சுப் பொறுப்பை ஏற்று மக்களை ஏமாற்றியுள்ளதாக தெரிவித்த முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், அவர் தனது பொறுப்பை உடனடியாக இராஜினாமா செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

தற்போது நாட்டு மக்களால் வெறுக்கத்தக்க ஆட்சியாளர்களும், அரசும் இந்த நாட்டை பலாத்காரமாக ஆண்டு வருகின்றது. இந்த சூழ்நிலையில் வன்னி மக்களின் வாக்குகளை பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை ஏற்றுள்ளமை வன்னி மக்களிடத்தில் மிகுந்த ஏமாற்



றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலாகவுள்ள இந்த அரசில் பெரும்பாண்மை இனத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்க்காமல் மறுத்து வந்த நிலையில் இவர் பதவியை பெற்று பலிக்கடாவாக மாறியுள்ளார்.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர் அரசியலுக்கு வருகை தருவதற்கு முன்னரே வன்னிப் பகுதியில் பல்வேறு சமூகப்பணிகளை முன்னெடுத்து வந்த அவரது தந்தையார் தற்போது உயிருடன் இருந்திருந்தால் இவர் அமைச்சுப் பொறுப்பை ஏற்றதை விரும்பியிருக்கமாட்டார் என்பதே நிதர்சனமான உண்மை.

குறித்த அமைச்சுப் பதவி மூலம் அவர் எதனைச் சாதித்துவிட முடியும் என்று நினைக்கிறார். குறிப்பாக அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் சமூகத்திற்காவது இதனால் ஏதாவது இலாபம் இருக்கின்றதா? மாறாக வாக்களித்த மக்களுக்கும், வன்னிமக்களுக்கும் பாரிய இழுக்கையும், அவமானத்தையுமே அவர் ஏற்படுத்தியுள்ளார்.

எனவே மக்களின் விருப்பத்துக்கு மாறாக செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் உடனடியாக தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதுடன் கொடுங்கோல் அரசுக்கு வழங்கிவருகின்ற ஆதரவையும் விலக்கிக்கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (அ)

# நாய்க் கடிக்குள்ளாகிய குடும்பஸ்தர் நீர்வெறுப்பு நோயினால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

தெரு நாய் கடிக்குள்ளாகிய குடும்பத் தலைவர் நீர்வெறுப்பு நோய்க்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நாய்க்கடிக்கு இலக்கானபோது விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி வழங்காது ஏற்பு ஊசி மட்டும் பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சபாரத்தினம் கனகலிங்கம் (வயது 50) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

பெப்ரவரி 16ஆம் திகதி குடும்பத் தலைவருக்கு நாய் கடித்துள்ளது. அவர் மறுநாள் காலை பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச் சென்றுள்ளார். அவருக்கு மருத்துவரின் ஆலோசனையில் ஏற்பு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் திடீர் சுகயீனம் காரணமாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில மணிநேரங்களில் உயிரிழந்துள்ளதாக இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# சர்வகட்சி இடைக்கால அரசை நிறுவுவதற்கு ஒத்துழையுங்கள்

## சஜித்திடம் தேரர்கள் வேண்டுகோள்



**கொழும்பு, ஏப். 28**

**சர்வகட்சி இடைக்கால அரசு அமைப்பதற்கு வெளியில் இருந்தாவது ஒத்துழைப்பு வழங்குமாறு முக்கியமான தேரர்கள் சிலர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

ஜனாதிபதி பதவியில் கோட்டாபய ராஜபக்ஷ நீடிக்கும்வரை இடைக்கால அரசில் இணையத் தயாரில்லை என்று சஜித் பிரேமதாஸ ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

எனினும், புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் இடைக்கால அரசு அமைப்பதற்கு தெற்கு அரசியலில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

முக்கியமான தேரர்கள் சிலர் இதன் பின்னணியில் செயற்படுகின்றனர்.

அவர்களே சஜித்தைச் சந்தித்து, அவரின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஆட்சி மாற்றத்துக்கு ஜனாதிபதி தயார்!

## அமைச்சருமான நாலக கூறுகிறார்



கொழும்பு, ஏப். 28

“பாராளுமன்றத்தில் இணக்கப்பாடு இருந்தால், ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி தயாராகவே இருக்கின்றார். எனவே, எதிரணி சாதாரண பெரும்பான்மையை நிருபித்து ஆட்சியை பொறுப்பேற்கலாம்.”

-இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு-

சர்வகட்சி இடைக்கால அரசை ஏற்படுத்துவதற்கு தான் தயார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மகாநாயக்க தேரர்களுக்கு எழுதிய கடிதத்திலும்அவர்அவ்விடயத்தை எடுத்துரைத்திருந்தார்.

ஆட்சி மாற்றத்துக்கு அவர் தடையாக இருக்கவில்லை. அரச தலைவராக நம்பகத்தன்மையுடன் செயற்பட்டு வருகின்றார்.

பாராளுமன்றத்தில் இணக்கப்பாடு இருந்தால், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தலாம். இது பற்றி ஜனாதிபதி எனக்கும் தனிப்பட்ட ரீதியில் தெரியப்படுத்தியுள்ளார்.

பிரச்னைக்கு அரசியலமைப்பு ரீதியில்தான் தீர்வு காணவேண்டும். இடைக்கால சர்வக்கட்சி அரசுக்கு ஜனாதிபதி ஏற்கனவே அழைப்பு விடுத்தார். எதிர்க்கட்சிகள் முன்வரவில்லை. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்தால், ஆட்சி மாற்றத்துக்கு ஜனாதிபதி எதிராக இருக்கமாட்டார்-என்றார். (அ)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டு 2.6 சதவீதமாக குறையும்

கொழும்பு, ஏப். 28

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார நிலமை குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையின்படி, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டு 3.6 சதவீதத்தில் இருந்து 2.6 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உலக வங்கி 600 மில்லியன் டொலர்கள் நிதி உதவியை இலங்கைக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 400 மில்லியன் டொலர்கள் விரைவில் வழங்கப்படும் என உலக வங்கியின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி சியோ கண்டா அறிவித்துள்ளார். (அ)

# மஹிந்தவுக்கு எதிராக மஹிந்தானந்த களத்தில்



கொழும்பு, ஏப். 28

பிரதமர்பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவை நீக்குவதற்கான அணியில் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயும் இணைந்து கொண்டுள்ளார் என தெரியவருகின்றது.

அரசுக்குள் உருவாகியுள்ள புதிய அணிக்கு அவரே தலைமை வழங்கி வருவதாகவும், ஜனாதிபதி நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே அவர் செயற்படுவதாகவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (அ)

# காகங்கள் தினத்தையொட்டி உதய கம்மன்பில இட்ட பதிவு!




கொழும்பு, ஏப். 28

இன்று சர்வதேச காகங்கள் தினமாகும் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், மனிதர்களால் காகங்களுக்கு ஏற்படும் துன்பகரமான யுகம் விரைவில் முடிவுபெற வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இன்றைய போராட்டத்துக்கு இ.தொ.காவும் பூரண ஆதரவு

கொழும்பு, ஏப். 28

பொருட்களின் திடீர் விலை உயர்வு மற்றும் பொருளாதார பிரச்னைக்கு எதிராக இன்று வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையத்துக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளது.

சௌமியபவனில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இ.தொ.கா தனது ஆதரவை வழங்கியுள்ளது.

மேலும், இ.தொ.கா நாடளாவிய ரீதியில் 300 இடங்களில் அதிருப்தியைக் குறிக்கும் வகையில் போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கௌரவமாக வெளியேறுங்கள்!

## பிரதமரிடம் ரத்ன தேரர் கோரிக்கை



கொழும்பு, ஏப். 28

“பதவி விலகமாட்டேன் என அடம்பிடிக்காமல், பிரதமர் மஹிந்த ராஜபக்ச கௌரவமாக வெளியேற வேண்டும்.”

- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

11 கட்சிகளின் கூட்டணிக்கும், சுயாதீன அணி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே ரத்ன தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டு நலன் கருதி, பதவி விலகும் முடிவை பிரதமர் எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# வவுனியாவில் அதிகரிக்கும் திருட்டுகள்!

வவுனியா, ஏப். 28

வவுனியாவில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

குருமன்காடு, யாழ் வீதி, இறம்பைக்குளம், கோவில்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களில் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் இறம்பைக்குளத்தில் தனிமையில் இருந்த வயோதிப் பெண்ணிடம் கத்தியை காட்டி பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இதேவேளை கோவில்குளத்திலும் பெண்ணொருவரிடம் தங்க சங்கிலியை திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இடைக்கால அரசமைக்கும் யோசனைக்கு 11 சுயாதீன கட்சிகளின் கூட்டணி அனுமதி

கொழும்பு, ஏப். 28

சர்வகட்சி இடைக்கால அரசமைக்கும் யோசனைக்கு 11 சுயாதீனக் கட்சிகளின் கூட்டணி அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி யோசனை சம்பந்தமாக அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் பேச்சு நடத்தி, தெளிவுபடுத்துவதற்கும் 11 சுயாதீனக் கட்சிகளின் கூட்டணி முடிவெடுத்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பதவி விலகாவிட்டால் - புதிய பிரதமரை நியமிக்க ஜனாதிபதி முன்வராவிட்டால், நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பிரதமரைப் பதவி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)



## அலரி மாளிகைக்கு எதிரில் உணவு தவிர்ப்பு போராட்டம்

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் அரசாங்கத்தினால் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் பெற்றுக்கொடுக்குமாறு கோரி அலரி மாளிகைக்கு எதிரில் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகைக்கு எதிரில் இளைஞர்கள் சிலர் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்-

ரம்புக்கனையில் அண்மையில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஈஸ்டர் தாக்குதல் காரணமாக 200 க்கும் மேற்பட்டவர்கள் மிலேச்சத்தனமாகக் கொலை செய்யப்பட்டனர். அதேபோல் இந்த நாட்டில் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. எக்னெலிகொட, லசந்த விக்ரமதுங்க, தாஜுதீன் போன்றவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இந்த அரசாங்கம் இவ்வாறு அப்பாவி மக்களைக் கொலை செய்த அரசாங்கம். அந்த மிலேச்ச செயல்களை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கவே நாங்கள் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்-என்றார். (அ)

## நெருக்கடியில் சிக்குண்டுள்ள மக்களுக்கு விசேட நிவாரணம்

கொழும்பு, ஏப். 28

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எதிர்வரும் மாதங்களில் விசேட நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உதவும் பலதரப்பு நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து இதற்காக நிதியை பெற்றுக்கொள்ள நம்புவதாக அமைச்சரவை இணை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

மக்கள் நெருக்கடியில் உள்ளார்கள் என எங்களுக்கும் தெரியும். இதனால் மக்களுக்கு எதிர்வரும் மாதங்களில் விசேட நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# அமெரிக்க தூதுவரிடம் எங்கள் ஆதங்கங்களை கொட்டினோம்

*காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி*

யாழ்ப்பாணம், ஏப். 28

**யாழ்.வந்த இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங்கிடம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையும் தமது தாய்மாரின் ஏக்கங்களையும் ஆதங்ககளையும் தெளிவுபடுத்தினோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் யாழ். மாவட்ட தலைவி யோ.கனகரஞ்சினி தெரிவித்தார்.**



நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள தனியார் விடுதியில் வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகளுக்கும், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையிலான சந்திப்பை முடித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஒரு பெண்மணியாக இருக்கின்ற நிலையில் உறவுகளைத் தொலைத்துவிட்டு தேடிக் அலையும் தாய்மாரின் ஏக்கங்களையும் அங்கங்களையும் இலகுவில் விளங்கிக் கொண்டார்.

எமது உறவுகளை தொலைத்துவிட்டு பல வருடங்களாக வீதிகளில் போராடும் எமக்கு சர்வதேசத்திடமிருந்தே தீர்வு கிடைக்கும் என நாம் நம்புவதாக அவரிடம் தெரிவித்தோம்.

உறவுகளை தொலைத்துவிட்டு தேடி அலையும் தாய்மார்கள் பலர் உயிரிழந்த நிலையில் அவர்களுக்கான நீதி தாமதிக்கப்படுவதாகவும் அவரிடம் சுட்டிக் கட்டினோம்.

இறுதி யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்களை கடந்த நிலையில் அரச பாதுகாப்புப் படைகளிடம் கையில் கொடுக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என இலங்கை அரசால் இது வரை கூறமுடியவில்லை.

இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தோம் .

எமது கோரிக்கை தொடர்பில் ஆழ்ந்து கவனித்த தூதுவர் எமக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பார்-என்றார்.

இந்த சந்திப்பில் வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் லீலாவதி ஆனந்த நடராஜா மற்றும் நிர்வாகத்தில் உள்ள பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ)

## நாட்டை விட்டு தப்பிச் செல்ல தயாராகும் அரசியல்வாதிகள்

கொழும்பு, ஏப். 28

முன்னாள் அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகள் சிலர் நாட்டை விட்டு வெளியேறத் தயாராக உள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் சட்டத்தரணிகள் சிலர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சிலரே இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற நடவடிக்கை மேற்கொள்வதாக அந்த சட்டத்தரணிகள் கூறியுள்ளனர்.

இதன் காரணமாக அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களை தடை செய்வதற்கு உத்தரவிட நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகள் சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார். (அ)

## வடக்கு அபிவிருத்தி உத்தியோத்தர்கள் இன்று சுகயீன விடுமுறை போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 28

நாடு தழுவிய ரீதியில் இன்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்கப் போராட்டத்துக்கு வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதனால், வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இன்று சுகவீன விடுமுறையை அறிவித்து இப்போராட்டத்தில் பங்கெடுக்குமாறு மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

பணிப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடு தழுவிய ரீதியில் இன்று வியாழக்கிழமை பல்வேறு தொழிற்சங்கங்களால், பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படவிருக்கும் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கமாகிய நாம் கீழ் வரும் விடயங்களை முன்னிறுத்திய வகையில் கலந்து கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

மிக நீண்டகாலமாக சம்பள உயர்வின்மை, பதவி உயர்வு/பதவி நிலை தொடர்பான முறையான நடைமுறையின்மை, சீரான கடமைப்பட்டியல் இன்மை மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படாமை போன்ற பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாம் தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதாரப் பிரச்னையாலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் அநேகமானவர்கள் யாழ்.மாவட்டத்திலிருந்தே ஏனைய மாவட்டங்களுக்கு தினசரி சென்று வருகின்றனர். அதன்பால் அவர்கள் தினமும் அதிகளவு பணத்தை செலவிடவேண்டிய நிலை காணப்படுகின்றது. போக்குவரத்து செலவுக்கே சம்பளம் போதாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை மாற வேண்டும். எனவே எமக்கான சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

பொருளாதார நிலை சீராக இல்லாதவரை நாம் மட்டுமல்லாது ஏனைய அனைத்து அரச ஊழியர்களும் பாதிக்கப்படுவர். இந்த பொருளாதார நெருக்கடிகள் குறையும் வரை எமக்கான வெளிக்களக் கடமைகள் மற்றும் வெளிக்கள கடமை நாட்கள் என்பன மட்டுப்படுத்தப் படல் வேண்டும். மேற்குறித்த கோரிக்கைகளை முன்னிறுத்தி நாம் சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுப்போம். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



## சுற்றுலாப் பயணிகளும் சிகிரியாவில் போராட்டம்

கொழும்பு, ஏப். 28

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சிலர் நேற்றுமுன்தினம் மாலை சிகிரியா அடிவாரத்தில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நாட்டை திவாலாக்கிய தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராக முழு நாடும் போராட்டம் நடத்தி வரும் நிலையில், மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன், இலங்கைக்கு சுற் றுலாப் பயணிகள் தொடர்ந்து ஆதரளிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். (அ)

# ஈலோன் மஸ்க் ட்விட்டரை கவர்ந்து இழுத்த கதை:

## “மொத்தமாக 4,400 கோடி டொலர் தருகிறேன்”

ட்விட்டர் நிறுவனத்தை 44 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு உலகின் மிகப்பெரிய பணக்காரரான ஈலோன் மஸ்க் வாங்குகிறார். முன்னதாக, ட்விட்டர் நிறுவனத்தை வாங்க ஈலோன் மஸ்க் முன்வந்தார். அதனை தற்போது ட்விட்டர் நிறுவனத்தின் நிர்வாகக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

ட்விட்டர் இயக்குநர் வாரியம் - ஈலோன் மஸ்க் இடையே நடந்த நீண்ட நேர பேச்சுவார்த்தையில் இந்த ஈலோன் மஸ்கின் இந்த பேரத்தை ட்விட்டர் நிர்வாகிகள் ஏற்றுக்கொண்டனர். ட்விட்டர் நிறுவனத்தின் மொத்த பங்கையும், தலா ஒரு பங்கு 54.20 டாலர் என்ற விலைக்கு வாங்க உள்ளார் ஈலோன் மஸ்க். ட்விட்டரில் 9.2 வீத பங்குகளை வைத்துள்ள ஈலோன் மஸ்க் அந்த நிறுவனத்தின் மிகப்பெரிய பங்குதாரராக தற்போது உள்ளார்.

ட்விட்டர் நிறுவனத்தை வாங்குவதற்கு ஈலோன் மஸ்க் இரு வாரங்களுக்கு முன்னதாக விருப்பம் தெரிவித்திருந்தார். அப்போது, ட்விட்டர் “மிகச்சிறந்த திறன்களை” கொண்டிருப்பதாகவும் அதனை தான் வெளிக்கொண்டு வரவிரும்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும், ட்விட்டர் தளத்தில் பல்வேறு மாற்றங்களை கொண்டுவருவது குறித்தும் அவர் அண்மைக் காலமாக கருத்து வெளியிட்டு வந்தார். அதில், ட்விட்டரில் பதிவுகள் சிலவற்றுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்துதல் மற்றும் போலி ட்விட்டர் கணக்குகளை நீக்குதல் உள்ளிட்டவை அடங்கும்.

ட்விட்டர் நிறுவனத்தை அதன் விருப்பத்துக்கு மாறாக கையகப்படுத்தும் ஈலோன் மஸ்க்கின் முயற்சியை அந்நிறுவனம் தடுக்க முயன்றது. ஈலோன் மஸ்க் ட்விட்டரை விழுங்குவதை தடுப்பதற்காக “விஷ மாத்திரை உத்தி” என்ற ஒன்றை கையாளப் போவதாகவும் அது அறிவித்திருந்தது. ஆனால், உரிய முறையில் பேரம் நடத்தினால், அதை ஏற்பதற்கான விருப்பத்தையும் ட்விட்டர் நிர்வாகம் வெளிப்படுத்தியிருந்தது.

இந்நிலையில், ட்விட்டர் நிறுவனத்தை வாங்குவதற்கான ஈலோன் மஸ்க்கின் பேரத்தை ஏற்றுக் கொள்ள வாக்களிக்குமாறு அந்நிறுவனம் பங்குதாரர்களை கேட்க உள்ளது.

### ட்விட்டர் நிறுவனத்தை ஈலோன் மஸ்க் எப்படி வாங்குவார்?

ட்விட்டர் நிறுவனத்தின் மொத்த மதிப்பு கிட்டத்தட்ட 37 பில்லியன் டொலர்கள் (3,700 கோடி டொலர்கள்). இதை மொத்தமாக 44 பில்லியன் டொலர் (4,400 கோடி டொலர்) விலைக்கு வாங்கிக் கொள்வதாக ஒரு ஜாக்பாட்டை அறிவித்தார் மஸ்க். இந்த பேரத்தை ட்விட்டர் ஏற்றுக்கொண்டது. இதையடுத்து, ஈலோன் மஸ்க் கையகப்படுத்துவதை தடுக்கும் வகையில் அமல்படுத்த இருந்த விஷ மாத்திரை உத்தியை கைவிடவும் ட்விட்டர் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

“மொத்தமாக ரொக்கமாக இப்போதே 44 பில்லியன் டொலரை தருகிறேன்” என்றும் குறிப்பிட்ட மஸ்க், இதற்காக வங்கிகளில் கடன் வாங்க முடிவு செய்தார். அதன்படி 21 மில்லியன் டொலரை தனது சொந்த பணத்தில் இருந்து கொடுக்கிறார். இது போக மீதம் உள்ள தொகையை டெஸ்லா பங்கு, ட்விட்டர் பங்கு ஆகியவற்றின் மீது கடன் வாங்குகிறார் மஸ்க்.

விளைவு அவரின் கைக்கு மொத்தமாக 44 பில்லியன் ரொக்கம் வந்தது. சந்தை மதிப்பை விட அவர் கூடுதல் விலை தர தயாராக இருந்ததால், அதையும் ரொக்கமாக உடனே கொடுக்க தயாராக இருந்ததால், மீண்டும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கூடி ஆலோசனை செய்தனர்.

ஆலோசனையின் முடிவில், விஷ மாத்திரை முறையை ஓரமாக வைத்துவிட்டு மஸ்க் கொடுத்த முன்வந்த தொகையை ஏற்றுக்கொண்டனர் இயக்குநர்சபை உறுப்பினர்கள். 10 மணி நேரத்திற்கும் மேல் நடந்த ஆலோசனைகளுக்குப் பின் கடைசியில் ஒருவழியாக ட்விட்டர் நிறுவனத்தை கைப்பற்றும் ஈலோன் மஸ்க்கின் டீல் வெற்றி முகட்டைத் தொட்டது. 44 பில்லியன் டொலருக்கு ட்விட்டர் நிறுவனத்தை ஈலோன் மஸ்க் வாங்க முடிவானது.







### ட்விட்டரில் என்ன செய்ய உள்ளார் மஸ்க்?

போர்ப்ஸ் இதழ் வெளியிட்ட பட்டியலின்படி, உலகிலேயே மிகவும் பணக்காரராக ஈலோன் மஸ்க் உள்ளார். அவருடைய சொத்து மதிப்பு 273.6 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இது பெரும்பாலும், அவர் நடத்திவரும் மின்சார வாகன தயாரிப்பு நிறுவனமான டெஸ்லா நிறுவனத்தின் பங்குகளால் உருவானது ஆகும். விண்வெளி ஆய்வு தொழில்நுட்ப நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் என்ற நிறுவனத்தையும் ஈலோன் மஸ்க் நடத்தி வருகிறார்.

“ஜனநாயகத்தின் அடிப்படை தத்துவமாக பேச்சு சுதந்திரம் உள்ளது. மானுட எதிர்காலம் குறித்த அத்தியாவசிய விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படும் டிஜிட்டல் பொதுத் தளமாக ட்விட்டர் உள்ளது,” என, ட்விட்டர் நிறுவனத்தை வாங்குவதற்கான ஒப்பந்தம் குறித்த அறிவிப்பில் ஈலோன் மஸ்க் தெரிவித்துள்ளார்.



“புதிய அம்சங்கள் மூலம் மேம்படுத்துதல், ட்விட்டர் மீதான நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் அதன் நெறிமுறைகளை உருவாக்குதல், ஸ்பேம்களை அகற்றுதல் மற்றும் அனைத்து மனிதர்களையும் அங்கீகரிப்பது போன்றவற்றின் மூலம், முன்பிருந்ததைவிட ட்விட்டரை சிறந்த நிறுவனமாக மாற்ற விரும்புகிறேன்” என அவர் தெரிவித்துள்ளார்.

“ட்விட்டர் மிகச்சிறந்த திறன்களை கொண்டுள்ளது. அவற்றை வெளிக் கொண்டுவரும் வகையில் அந்நிறுவனம் மற்றும் ட்விட்டர் பயனர்களுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து எதிர்நோக்குகிறேன்” என ஈலோன் மஸ்க் தன் அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

**“புதிய அம்சங்கள் மூலம் மேம்படுத்துதல், ட்விட்டர் மீதான நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் அதன் நெறிமுறைகளை உருவாக்குதல், ஸ்பேம்களை அகற்றுதல் மற்றும் அனைத்து மனிதர்களையும் அங்கீகரிப்பது போன்றவற்றின் மூலம், முன்பிருந்ததைவிட ட்விட்டரை சிறந்த நிறுவனமாக மாற்ற விரும்புகிறேன்” என அவர் தெரிவித்துள்ளார்.**

ட்விட்டரில் வெளியாகும் சில கருத்துகள் காரணமாக அரசியல்வாதிகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் மத்தியில் அதிக அழுத்தத்தை ட்விட்டர் சந்தித்துவந்த நிலையில், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ட்விட்டரில் வெளியாகும் தவறான தகவல்கள் குறித்து அந்நிறுவனம் இணக்கமாக செல்வதாக பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்தன.

கடந்த ஆண்டு அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் கணக்கை ட்விட்டர் தடை செய்தது. அவர் அதிக செல்வாக்குமிக்க ட்விட்டர் பயனராக இருந்தபோதும் அவருடைய பதிவு, “வனமுறையை தூண்டுவதாக” கூறி தடை செய்தது.

### ட்விட்டரின் புதிய “அரசர்” ஈலோன் மஸ்க்

ட்விட்டர் நிறுவனத்தை வாங்குவதன் மூலம் அந்நிறுவனத்தின் முழு “அரசராக“ ஈலோன் மஸ்க் ஆகிறார். இது “பொருளாதாரம்” பற்றியது அல்ல என ஏற்கெனவே தெரிவித்திருந்த ஈலோன் மஸ்க், அதிகாரம் மற்றும் செல்வாக்கு குறித்தது என கூறியிருந்தார்.

ட்விட்டர் நிறுவனம், கூட்டுப் பங்கு நிறுவனம் என்ற நிலையில் இருந்து தனியார் நிறுவனமாவதன் மூலம் அதன் மீதான முழு கட்டுப்பாடும் ஈலோன் மஸ்க் வசம் செல்லும்.

அந்நிறுவனத்தில் தான் என்ன செய்ய விரும்புகிறாரோ, அதனை மேற்கொள்வதற்கான அதிகாரம் ஈலோன் மஸ்க்குக்கு வரும்.

மேலும், ட்விட்டர் நெறிமுறைகள் பொதுத்தளத்தில் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதன் மூலம், ட்விட்டர் எப்படி இயங்குகிறது என்பதை மக்கள் அறிந்துகொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

### டிரம்ப் மீண்டும் வர வாய்ப்பு

இந்த நடவடிக்கை டொனால்ட் டிரம்ப் ட்விட்டருக்கு மீண்டும் திரும்புவதற்கான கதவைத் திறந்துவிடுகிறது, இருப்பினும் அவர் தனது சொந்த சமூக ஊடகத் தளமான ட்ரூத் சோஷியலைப் பயன்படுத்த விரும்புவதாகத் தெரிகிறது.

பல ஆண்டுகளாக பழமைவாதிகள் ட்விட்டர் தங்களுக்கு எதிராக ஒரு சார்புடையது என்று தெரிவித்து வந்தனர். மேலும் இந்த செய்தி அமெரிக்காவில் உள்ள குடியரசுக் கட்சியினரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வுக்கான சுலோகங்களையும் கையிலேந்துகிறவர்களாக சிங்கள மக்களை ஆக்குவோம்!

**அ. வரதராஜா பெருமாள்,**
(முன்னாள் வடக்கு -
கிழக்கு மாகாண முதலமைச்சர்)

இலங்கை வாழ் அனைத்து மக்களும் எதிர்நோக்குகின்ற அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு கேட்டு எழுச்சி பெற்றுள்ள மக்கள் போராட்டமே இப்போது கொழும்பிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இந்தப் போராட்ட எழுச்சியை சிங்களவர்களின் போராட்டமாக சித்தரிபதுவும் இதில் தழிழர்களுக்கு அவசியம் ஏதும் இல்லை என கருத்துக்கள் பரப்புவதுவும் சரியானதல்ல.

தற்போது எழுந்துள்ள நெருக்கடி இலங்கையின் அனைத்து மக்களும் எதிர் நோக்குகின்ற பாரதூரமான பிரச்சினை. இந்த எழுச்சியை பிரதானமாக சிங்கள மக்கள் மத்தியிலிருந்து புறப்பட்டுள்ள சக்திகள் முன்னெடுத்திருந்தாலும் இது அனைத்து மக்களுக்குமான அரசியல் பொருளாதார நலன்களை இலக்காகக் கொண்ட எழுச்சியே. இந்த எழுச்சியிலிருந்து எழும் கோரிக்கைகளில் "கோத்தாவே வீட்டுப் போ" என்பது ஊழல் மோசடி ஆட்சியாளர்களே வீட்டுக்குப் போங்கள்!, இனவாதம் மதவாதம் மூலம் மக்களைப் பிரித்து ஆட்சி செய்பவர்களே வீட்டுக்குப் போங்கள்! என்பவையும் உள்ளடங்கியுள்ளன என்பது வெளிப்படை.

இது மட்டுமல்ல, 20வது அரசியல் யாப்புத் திருத்தம் மூலமான எதேச்சாதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும், பயங்கரவாத தடைச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்று வருகின்றன. இந்தக் கோரிக்கைகளின் தேவைகள் வெறுமனே சிங்களவர்களின் தேவைகளோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல, இலங்கை வாழ் சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக தமிழர்களின் நலன்களுக்கு மிகவும் அவசியமானவைகளாகும்.



> **தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு பற்றிய விடயமெதுவும் இன்றைய எழுச்சியில் பிரதானமான ஒன்றாக இல்லை என்பது உண்மைதான். ஆனால் அதனை எழுச்சி பெற்று நிற்கும் சிங்கள சக்திகளிலிருந்து தமிழர்கள் தூர நின்று ஏற்படுத்த முடியாது.**

ராஜபக்சாக்களை சர்வதேச குற்றவாளிக் கூண்டில் ஏற்ற வேண்டும் என்ற சுலோக அட்டைகளையும் சிலர் காலி முகத் திடலில் தாங்கி நிற்கின்றனர். ராஜபக்சாக்களை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்ற சுலோகங்கள் சிங்கள மக்களிடையே இருந்து இலங்கையில் மட்டுமல்ல அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் வாழும் சிங்களவர்களிடையே இருந்தும் ஒலிக்கின்றன. இவையெல்லாம் தமிழர்களிடையேயும் இருக்கின்ற சுலோகங்கள் தானே!

யாருக்கு வாக்குப் போட்டாலும் பரவாயில்லை ராஜபக்சாக்களுக்கு வாக்குப் போட மாட்டோம் என அவர்களுக்கு எதிராக கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் மிகப் பெருந் தொகையில் வாக்குளைப் போட்ட தமிழர்கள் இன்று அதே ராஜபக்சாக்களை ஆட்சியை விட்டு விட்டு "வீட்டுக்குப் போங்கள்" என சிங்கள மக்கள் எழுச்சி கொண்டு போராடுகின்ற போது அந்தப் போராட்டத்துக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று தமிழர்கள் மத்தியில் கருத்துக்களைப் பரப்புவது படுமுரணான அரசியல் நிலைப்பாடாக உள்ளது.

சிங்கள மற்றும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்று திரண்ட அரசியல் சக்தியாக ஏற்பட்டு விடக் கூடாது என்பதுதான் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் முதன்மையான இலக்காக இருந்து வந்திருக்கின்றது. அதற்காகத்தான் அவர்கள் 1948ல் தமிழர்களில் அரைவாசி மக்கள் தொகையினரின் வாக்குரிமை மற்றும் குடியுரிமைகளைப் பறித்தார்கள். பின்னர் 1956ம் ஆண்டு சிங்களம் மாத்திரமே அரசகரும மொழி என ஆக்கினார்கள். 1972ல் பௌத்தமே அரச மதம் என ஆக்கினார்கள். கடைசியாக தமிழர்கள் மீது ஒரு நீண்ட கால யுத்தத்தையும் திணித்தார்கள். இப்பொழுது அவற்றையெல்லாம் மீறி இலங்கை வாழ் அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் ஓரணி திரளக் கூடிய வாய்ப்பிற்கான கதவு திறக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு பற்றிய விடயமெதுவும் இன்றைய எழுச்சியில் பிரதானமான ஒன்றாக இல்லை என்பது உண்மைதான். ஆனால் அதனை எழுச்சி பெற்று நிற்கும் சிங்கள சக்திகளிலிருந்து தமிழர்கள் தூர நின்று ஏற்படுத்த முடியாது. இலங்கையின் தேசியக் கொடியை அனைவருமாகக் கையில் ஏந்த வேண்டும் என்கிற சிங்கள மக்களை, தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வுக்கான சுலோகங்களையும் கையிலேந்துகிறவர்களாக ஆக்குவது தமிழர்கள் மத்தியிலுள்ள ஜனநாயக சக்திகளின் கடமையே.

சந்திரிகா பிராந்திய சுயாட்சி தருவார்! ரணில் விக்கிரமசிங்கா ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி தருவார்! சஜித் பிரேமதாசா 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவார்! என்று முயற்சிக்கின்ற தமிழ் அரசியற் சக்திகள் ஏன் இன்று லஞ்ச ஊழல் கொண்ட ஆட்சியாளர்கள் வேண்டாம்! இனவாதம் மதவாதம் வேண்டாம்! எதேச்சாதிகார குடும்ப ஆட்சி நடத்தும் ராஜபக்சாக்கள் எவருமே வேண்டாம்! என்று கொடி பிடித்து நிற்கின்ற சிங்கள, மலையக மற்றும் முஸ்லிம் மக்கள் சக்தியோடு அருகில் சென்று அவர்களோடு இணைந்து நின்று தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளையும் சுலோகங்களாக ஏந்தி, அவற்றை எழுச்சி பெற்று நிற்கும் அனைத்து மக்களின் கரங்களும் ஏந்துகின்ற நிலையை ஏற்படுத்துவதற்கு முயலக்கூடாது.

மாகாண சபைத் தேர்தல்களும், உள்ளூராட்சித் தேர்தல்களும் ஜனநாயக விரோதமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தேர்தலை நடாத்தினால் ஆட்சியாளர்கள் நிச்சயம் படுதோல்வி அடைவார்கள் என்று அவர்களே கூறுகிறார்கள். அந்தத் தேர்தல்களை இப்போது நடத்தும் சூழல் இல்லை என்று சொல்வதெல்லாம் பச்சைப் பொய். அந்தத் தேர்தல்களை நடத்துவதற்கான அனைத்து தயாரிப்புகளையும் கொண்டதாக ஏற்கனவே தேர்தற் திணைக்களம் உள்ளது. அதற்கான அரச ஊழியர்கள் விசேட கொடுப்னவுகள் இல்லாமலே இந்தத் தேர்தலுக்கான சேவைகளை வழங்க தயாராகவே இருப்பார்கள். இங்கு பதவிகளில் இருக்கும் அரசியல் வாதிகளே அதற்குத் தயாராக வேண்டும். எனவே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களை அரசாங்கம் உடனே நடாத்த வேண்டும் என்பதுவும் நாட்டு மக்களின் கோரிக்கையாக மேலேழ வேண்டும்.

13வது திருத்தத்தின்படியான அதி காரங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென இந்தியப் பிரதமருக்கு கடி தம் எழுதி விட்டுக் காத்திருக்கும் தமிழ் அரசியற் பிரதிநிதிகள் தென்னிலங்கை யில் எழுச்சி பெற்றிருக்கும் மக்கள் சக்தி யின் முன்னால் தமது கோரிக்கைகளை முன்வைத்து ஏன் கை கோர்க்கக் கூடாது. வடக்கு கிழக்கு தமிழர்களும் தங்களோடு ஒன்று திரண்டு நிற்க வேண்டும் என்ற எண்ணமும் எதிர்பார்க்கையும் தென்னி லங்கை சக்திகளிடம் உள்ளதென்பதில் சந்தேகமில்லை. இதை ஏன் தமிழ் அரசியற் சக்திகள் தங்களுக்குமான வாய்ப்பாக கருதி செயற்படக் கூடாது.

இன்று எழுச்சி கொண்டு நிற்கும் தென்னிலங்கை சக்திகளோடு வடக்கு கிழக்கு சக்திகள் ஒன்று திரண்டு விடக் கூடாது என்பது ராஜபக்சாக்களின் விருப்பமாக மட்டுமல்ல, சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் அனைத்தினதும் விருப்பமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்த விருப்பத்துக்கு ஏற்ற வகையாகத் தான் தமிழ் அரசியற் சக்திகளும் செயற்படப் போகின்றனவா?

இன்றைய ஆட்சி தொடர்ந்தாலும் சரி அல்லது ஆட்சி மாறினாலும் சரி தங்களது சொந்த நலன் களுக்கு எதுவும் வசதியாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் ஓரிரு தமிழ் அரசியற் பிரமுகர்கள் தென்னி லங்கையில் எதிரும் புதிருமாக உள்ள அரசியல் பிரதி நிதிகள் மத்தியில் அங்கும் இங்கும் என ஊடாடித் திரிகிறார்கள். அவர்கள் மட்டும் தென்னிலங்கையில் நிலவும் தற்போதைய ஓட்டத்தில் தங்கள் சொந்த அரசியற் படகுகளை ஓட விடலாம் என்றால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அனைத்து அரசியல் சமூக பிரதிநிதிகளும் பிரமுகர்களும் பரந்து பட்ட தமிழ் மக்களின் நலன்களையும் இலங்கையின் அனைத்து மக்களினது நலன்களையும் கருத்திற் கொண்டு தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் எழுச்சி நீரோட்டத்தோடு ஏன் பங்காளர்களாக ஆக முடி யாது? ஏன் ஆகக் கூடாது?

எனவே, தமிழர்கள் மத்தியிலுள்ள அனைத்து அரசியல் சமூக செயற்பாட் டாளர்களை நோக்கி நான் கேட்டுக் கொள்வதென்னவெனில் -

1. தென்னிலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் எழுச்சியை இலங்கையின் அனைத்து மக்களினதும் எழுச்சியாக மாற்றுங்கள்!,
2. இலங்கையின் அனைத்து மக்களினதும் நலன்களுக்கான கோரிக்கைகள் அனைத்தையும் தமிழர்களும் கையிலே ஏந்துகிறார்கள் என்ற எண்ணத்தை முன்னணிக்குக் கொண்டு வந்து சிங்கள - தமிழ் அரசியற் தோழமையைக் கட்டி எழுப்பி புதியதோர் அரசியற் கலாச்சாரத்துக்கான கதவுகளைத் திறவுங்கள்!
3. தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கான அரசியற் தீர்வுகள் தமிழர்களுக்கு மட்டும் தேவையானவையல்ல அவை இலங்கை மக்கள் அனைவரினதும் நன்மைக்கும் நல்லுறவுகளுக்கும் தேவையானவை என்ற கருத்தை பரந்துபட்ட சிங்கள மக்களின் சிந்தனைக்கும் எடுத்துச் செல்லுங்கள்!
4. மாகாண மற்றும் உள்ளூராட்சிகளுக்கான உயர்ந்தபட்ச அதிகாரப் பகிர்வும், முன்னேற்றகரமான ஜனநாயக அரசியலும், செழிப்பான சமூக பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றோடொன்று தொடர்புடையவை, ஒன்றுக்கொன்று அவசியமானவை என்ற கருத்தை நாடு தழுவிய வகையில் சக்தி மிக்கதாக ஆக்குங்கள்!





# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

**60.** பொருத்தமான வாக்கியங்கள்


### கல்வி tv CHANNEL-1

**28.04.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

**28.04.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிராமப்புற மக்கள் மருத்துவ சேவை பெற பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்

## கிழக்கு சுகாதார அமைச்சின் செயலர் தெரிவிப்பு

திருமலை, ஏப். 28

**நகர்ப்புறங்களில் வாழுகின்ற மக்கள் பெருமளவில் வைத்திய சேவைகளை மிக இலகுவாகப் பெற்றுவருகின்றனர். ஆனால் கிராமப் புறங்களில் வாழுகின்ற மக்கள் உரிய நேரத்தில் வைத்திய சேவை களை பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.**




கிழக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் 15 மில்லியன் நிதியொதிக்கீட்டின் கீழ் நிர்மானிக்கப்பட்ட சீனக்குடா ஆரம்ப பராமரிப்பு வைத்திய நிலையத்தை மக்கள் பாவனைக்கு கையளித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி. ஜீ.எம்.கோஸ்த்தா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு குறித்த ஆரம்ப பராமரிப்பு வைத்திய நிலையத்தை திறந்து வைத்து மக்கள் பாவனைக்கு கையளித்தார்.

அதன் பின்னர் அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் ஆரோக்கியமுள்ளவர்களாக வாழவேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் பல திட்டங்களை முன்வைத்து சகல முன்னெடுப்புக்களையும் முன்னெடுத்து வருகின்றது.

கிராமப் புறங்களில் வாழு கின்ற மக்களின் காலடியில் வைத்திய சேவைகள் மிக இலகுவாக சென்றடைய வேண்டும் என்பதற்காகவே ஆரம்ப பராமரிப்பு வைத்திய நிலையங்களை நிர்மாணித்து அங்கு வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்து பொதுமக்களின் கைகளில் பாவனைக்கு கையளித்து வைத்து வருகின்றோம்- என்றார்.

இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் மோகன குமரன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் வி. குகேந்திரன், குறித்த வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் திருமதி ஆர்.முஜீஸ் உள்ளிட்ட மாகாண திணைக்கள அதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# பயங்கரவாத தடைச்சட்டம் மிக பயங்கரமானதொன்று

## இரா.சாணக்கியன் கூறுகிறார்

மட்டக்களப்பு, ஏப். 28

உண்மையிலேயே இந்த பயங்கரவாத தடைச்சட்டமானது ஒரு பயங்கரமானதொரு சட்டம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சில கைதிகளை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அபர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்களை சந்தித்து பேசுவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்திருந்தது. உண்மையிலேயே இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் எங்களைச் சந்தித்து தங்களது உறவுகளை விடுதலை செய்வதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

உண்மையிலேயே இந்த பயங்கரவாத தடைச்சட்டமானது ஒரு பயங்கர மானதொரு சட்டம். கடந்த காலத்தில் இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக் கூறி நானும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனும் வடக்கு-கிழக்குக்கு வெளியிலே இலங்கை தமிழரசு கட்சி ஆரம்பித்திருந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தோம்-என்றார். (அ)

# நாட்டு மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு கிழக்கு ஆளுநர் தலைமையில் வழிபாடு



திருமலை, ஏப். 28

நாட்டு மக்களின் சுபீட்சமான நல்வாழ்வுக்கான விஷேட பூசை வழிபாடு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த விஷேட பூசை வழிபாடு நேற்று முன்தினம் நள்ளிரவு ஆரம்பமாகி நேற்றுக் காலை 9.30 மணியளவில் அன்னதானத்துடன் நிறைவு பெற்றது.

இதற்கு கிழக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் மாகாண திணைக்களங்கள் தங்களின் பங்களிப்புக்களை வழங்கியிருந்தன. (அ)

# பெற்றோலுக்கான வரிசை குறைகிறது

அம்பாறை, ஏப். 28

அம்பாறை மாவட்டத்தில் கடந்த பல வாரங்களாக இருந்து வந்த பெட்ரோலுக்கான கியுவரிசை நேற்று முன்தினம் குறைந்து காணப்பட்டது.

மாவட்டத்திலுள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கடந்த காலங்களில் 2 கிலோ மீற்றருக்கும் கூடுதலாக பெற்றோலுக்கான வரிசை காணப்பட்டது. இதனால் மக்கள் பலத்த சிரமத்தை எதிர் நோக்கி வந்தனர்.வாகன ஓட்டமும் குறைந்திருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் இந்த வரிசை வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

நேற்று முன்தினம் அதிகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 10 பேருக்கு உட்பட்டவர்களே நின்று வாகனங்களுக்கு நெருக்கடியின்றி பெற்றோல் நிரப்பியதைக் காணமுடிந்தது. (அ)

# காட்டு யானைகளின் தொல்லை இரவில் பீதியுடன் வாழும் மக்கள்

அம்பாறை, ஏப். 28

ஒலுவில் அஷ்ரப் நகர் மீள் குடியேற்றக் கிராமத்தில் அதிகரித்து காணப்படும் காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு வரும் யானைக் கூட்டம இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகுந்து வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தற்போது சிறுபோக வேளான்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நெற் பயிர்களை யானைகள் அழிப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இக்கிராமத்தில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் வெகுவாக பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் எல்லை கிராமங்களான சம்புநகர், ஹிறாநகர், ஆலிம்நகர் ஆகிய பிந்தங்கிய பிரதேசங்களிலும் யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு எல்லைக் கிராமங்களில் மின்சார வேலிகளை அமைத்துத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சாகாமம்குளத்தினுள் ஆணின் சடலம் மீட்பு

அம்பாறை, ஏப். 28

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சாகாமம் குளத்தில் அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இப் பகுதியில் பயிர்ச் செய்கைக்கு சென்ற விவசாயிகள் குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதை கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்காக நீதிமன்ற உத்தரவை பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ரஷ்யா - உக்ரைன் யுத்தம் மூன்றாம் நாட்டுக்கு விரிவு

## டிரான்ஸ்னிஸ்ட்ரியாவிலும் தாக்குதல்

கீவ், ஏப். 28

**உக்ரைன் எல்லையோரம் மோல்டோவாவுக்குள் அமைந்துள்ள டிரான்ஸ் னிஸ்ட்ரியா பிராந்தியத்தில் திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களும் அடுத்தடுத்துத் தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. மர்மமான விதத்தில் கிற னேட் லோஞ்சர்கள் மூலம் நடத்தப்பட்ட அந்தத் தாக்குதல்களில் ரஷ்யாவின் ஒளி, ஒலிபரப்பு சேவையை வழங்குகின்ற அன்ரனா கோபுரங்கள் சேதமடைந் துள்ளன.**



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் நேற்று முன்தினம் மாலை ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து உக்ரைன் மீதான போர் நிறுத்தம் குறித்துப் பேசினார்.

ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சி அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படுகின்ற டிரான்ஸ்னிஸ்ட்ரியாவின் பாதுகாப்புப் பணிமனை ஒன்றும் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. இத்தாக்குதல்களை அடுத்து மோல்டோவா அரசு அதன் பாதுகாப்புச் சபையைக் கூட்டி நிலவரத்தை ஆராய்ந்துள்ளது. உக்ரைன் யுத்தம் தனது எல்லைக்குள் நீள்வதாக அது அச்சம் வெளியிட்டுள்ளது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த மோல்டோவாவின் ஒரு பகுதிதான் டிரான்ஸ்னிஸ்ட்ரியா. உக்ரைனுக்கும் ருமேனியாவுக்கும் இடையே இருக்கின்ற ஐரோப்பாவின் மிக வறிய நாடு மோல்டோவா. அதற்குள் அமைந்த இன்னுமொரு நாடுதான் டிரான்ஸ்னிஸ்ட்ரியா. 1992 இல் நடந்த போரின் பின் மோல்டோவாவை விட்டுப் பிரிந்து தன்னைத்தானே சுயாட்சிப் பிராந்தியமாக அறிவித்துள்ள டிரான்ஸ்னிஸ்ட்ரியாவை உலகம் தனி நாடாக அங்கீகரிக்கவில்லை. அது இன்னமும் மோல்டோவா எல்லைக்குள் அமைந்த ஒரு பகுதியாகவே உலகப் படத்தில் வரையப்படுகிறது.

ரஷ்ய மொழி பேசும் சுமார் நான்கு லட்சம் மக்கள் அங்கு வசிக்கிறார்கள். உக்ரைனின் டொன்ஸ் பிராந்தியம் போன்றே டிரான்ஸ் னிஸ்ட்ரியாவும் ரஷ்யச் செல்வாக்குக்குட் பட்டது. மோல்டோவா மேற்கே நேட்டோவின் பக்கமும் டிரான்ஸ்னிஸ்ட்ரியா கிழக்கே ரஷ்யாவின் பக்கமுமாக அணி பிரிந்து நிற்பதே அங்குள்ள அரசியல் நெருக்கடியின் மைய விவ காரம் ஆகும். டிரான்ஸ்னிஸ்ட்ரியா ஆட்சியா ளர்கள் நிதி, பாதுகாப்பு, பொருளாதார உதவிகள் என ரஷ்யாவின் ஆதரவுடனேயே இயங்கு கின்றனர். மோல்டோவாவுடனான உள்நாட்டுப் போரை அடுத்து ரஷ்யா தனது ஆயிரத்து 500 வீரர்களை அமைதிப்படையாக அங்கு நிறுத்தியிருக்கிறது. உக்ரைனின் தென் மேற்குப் பகுதியைக் கைப்பற்றுவதன் மூலம் அங்கி ருந்து டிரான்ஸ்னிஸ்ட்ரியா வுக்கான தரைப் பாதை ஒன்றை நிறுவிமோல்டோவா வரை போரை விஸ்தரிப்பது புடினின் திட்டம் என்று உக்ரைன் குற்றம் சுமத்துகிறது.

# கொலம்பியாவில் 3 மாதங்களில் 52 தன்னார்வலர்கள் படுகொலை



கொலம்பியாசிற்றி, ஏப். 28

கொலம்பியாவில் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 52 மனித உரிமைகள் ஆர்வ லர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் கொல்லப்பட் டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது 2021ஆம் ஆண்டை விட அதிக மாகும். கடந்த ஆண்டு 145 பேர் கொல்லப்பட்டனர். கொலம்பியாவின் மனித உரி மைகள் அமைப்பின் கருத்துப் படி, போதைப்பொருள் கடத் தல் கும்பல்கள், சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் நலன்களு டன் மோதுவதால் இவர்கள் இலக்கு வைக்கப்பட்டனர்.

மனித உரிமைகள் ஆர்வ லர்களுக்கு உலகின் மிகவும் ஆபத்தான நாடுகளில் ஒன்றாக கொலம்பியா உள்ளதாக கண் காணிப்பாளர்கள் கூறுகின்ற னர்.

உயிரிழந்தவர்களில் 48 ஆண்களும் 4 பெண்களும் அடங்குகிளன்றனர். இதில் மிகவும் அதிர்ச்சியூட்டும் சம்ப வமாக 14 வயதான பழங்குடி ஆர்வலர் பிரைனர் டேவிட் குகுனேம் தமது பூர்வீக நிலங் களை பாதுகாக்கும் நிராயுதபா ணியன குழுவுடன் கண் காணிப்பு பணியில் ஈடுபட்டி ருந்தபோது சுட்டுக் கொல்லப் பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# ஆங்சான் சூகிக்கு 5 ஆண்டுகள் சிறை!

யங்கூன், ஏப். 28

மியன்மார் நாட்டின் மக்க ளாட்சி ஆதரவாளரும் தேசிய ஜனநாயக லீக் கூட்டணியின் தலைவருமான ஆங்சான் சூகிக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள ளது.

ஆங்சான் சூகி மீது நிதி மோசடி, கொரோனா விதி மீறல்கள் உள்ளிட்ட சில வழக் குகள் இராணுவ அரசால் பதி யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் தொடர்ந்து நடை



பெற்று வந்த நிலையில், நிதி மோசடி வழக்கில் குற்றவாளி யாக்கப்பட்ட அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து, அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ)

# ஹார்வாட் பல்கலை தமிழ் இருக்கை; தலைமைப் பேராசிரியர் நியமனம்!

நியூயோர்க், ஏப். 28

அமெரிக்காவின் ஹார் வாட் பல்கலைக்கழகத் தில் அமைந்துள்ள தமிழ் இருக்கைக்கு தலைமைப் பேராசிரியராக மார்த்தா ஆன் செல்பி நியமிக்கப் பட்டுள்ளார்.



இவர், திலீப்குமார் எழுதிய தமிழ்ச் சிறுகதை தொகுப்பை ஆங்கிலத் தில் 'கற் இன் தி அக்ர ஹாரம்' அண்ட் அதர் ஸ்ரோறிஸ்' (Cat in the Agraharam and other stories) என்னும் தலைப்பில் சமீபத்தில் மொழி பெயர்த்துள்ளார். சங்க இலக்கிய ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றவர்.

உலகின் தலைசிறந்த பல்கலைக்கழ கங்களில் 380 ஆண்டுகள் பழமையும் பாரம்பரிய சிறப்பும் கொண்டது ஹார் வாட். அதில் தமிழ் மொழிக்கு இருக்கை அமைக்கும் பணி கடந்த 2019ஆம் ஆண்டு இறுதிசெய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அதற்குத் தலை மைப் பேராசிரியரைத் தெரிவு செய்யும் பணியைப் பல்கலைக்கழகம் மேற் கொண்டு வந்தது. தற்போது, அந்தப் பணிக்கு மார்த்தா ஆன் செல்பி தெரிவாகி யுள்ளார். இதைக் கனடா வாழ் தமிழ் எழுத்தாளரும் ஹார்வாட் மற்றும் ரொறன்ரோ பல்கலைக்கழகங் களில் தமிழ் இருக்கை அமைக் கும் பணியில் பங்காற்றி வருபவருமான அ. முத்து லிங்கம் தன்னுடைய அறிவித்துள்ளார்.

மார்த்தா ஆன் செல்பி எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி ஹார்வாட் பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கைத் துறையில் 'Sangam Professor of South Asian Studies' என்ற புதிய கல்விப் புலப் பணியில் இணையவிருக்கி றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மார்த்தா ஆன் செல்பி, ஒஸ்டின் நக ரில் அமைந்துள்ள டெக்ஸாஸ் பல்க லைக்கழகத்தின் 'சௌத் ஏசியன் ஸ்ரடீஸ்' துறையில் இணை பேராசியராகப் பணி யாற்றி வருபவர். அங்கு அவர், இந்திய இலக்கியம், இந்து, பௌத்த மதக் கல்வி, இந்திய மருத்துவ முறை அறிமுகக் கல்வி உள்ளிட்ட பல பாடப்பிரிவு களைப் பயிற்றுவித்து வருகிறார்.

இவர், 1994இல், தமிழ் -சமஸ்கிருத இலக்கியங்களை ஆய்வு செய்து, சிக் காகோ பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர். சங்க இலக்கியத்தில் தொடர் ஆய்வுகளைச் செய்துவரும் இவருடைய நூல்கள், ஒக்ஸ்போர்ட், கொலம்பியா பல்கலைக்கழக வெளி யீடுகளாக வெளிவந்துள்ளன. (ஐ)

# பாகிஸ்தான் தற்கொலை தாக்குதல் நால்வர் உயிரிழப்பு; நால்வர் காயம்!

கராச்சி, ஏப். 28

பாகிஸ்தான் - கராச்சி பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் தற் கொலை குண்டுதாரி ஒருவர் சக்திவாய்ந்த குண்டை வெடிக்கச் செய்ததில் மூன்று சீன மொழி ஆசிரியர்கள் மற்றும் ஒரு பாகிஸ் தானியர் உட்பட நான்கு பேர் பலியாகி னர். மேலும் 4 பேர் காயமடைந்தனர்.





கராச்சி பல்கலைக் கழகத்தில் சீன மொழி பயிற்றுவிக்கும் கன்பூசியஸ் நிறுவனக் கட்டடத்தின் அருகே நிறுத்தப்பட்டிருந்த வான் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடிக்கச் செய்யப்பட்டதில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் கன்பூசியஸ் சீன மொழி பயிற்சி நிறுவன பணிப்பாளர் ஹூவாங் குய்பிங், டிங் முபெங், சென்சா ஆகிய 3 சீனர்கள் பலியாகினர். இவர் களில் 2 பேர் பெண்களாவர். சீனர் களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானை தளமாகக் கொண்ட, பலுசிஸ்தான் மாகாணத்தில் இயங்கி வரும் பலுச் லிபரேஷன் ஆர்மி (BLA) என்ற பிரிவினைவாதக் குழு இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற் றுள்ளது.

பெண் தற்கொலைதாரி ஒருவரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக பாகிஸ்தான் பொலிஸ் தலைமை அதிகாரி குலாம் நபி மேமன் தெரிவித் துள்ளார்.

பெரும்பாலும் தற்கொலை குண்டுதாரி கராச்சி பல்கலைக்கழ கத்தில் கல்வி கற்று வருபவராக இருக்க லாம் என நம்பப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பலூசிஸ்தான் பிரிவினைவாதிகள் கடந்த சில மாதங்களாக பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் பணிபுரியும் சீனர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வரும் இந்நிலையில் இவ்வாறான மற் றொரு தாக்குதல் சம்பவமாக இது பதி வாகியுள்ளது. (ஐ)

# பெங்களூர் அணியை சுருட்டியது ராஜஸ்தான்!

புனே, ஏப். 28

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் 29 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் அணிகள் நிலையில் 12 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது.

ரியான் பரக்கின் சிறப்பான துடுப்பாட்டம், குல்தீப் சென் மற்றும் ரவிச்சந்திரன் அஷ்வின் ஆகியோரின் திறமையான பந்துவீச்சுகள் என்பன ராஜஸ்தான் றோயல்ஸை வெற்றி அடையச் செய்தன.

பெங்களூர் சார்பாக ஜொஷ் ஹஸல்வூட், வனிந்து ஹசரங்க டி சில்வா, மொஹமத் சிராஜ் ஆகியோர் கட்டுப்பாட்டுடன் பந்து வீசிய போதிலும் துடுப்பாட்ட வீரர்கள் பிரகாசிக்காததால் அந்த அணி தோல்வியைத் தழுவியது.

இந்தியாவில் நடக்கும் ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் புனேயில் நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

ஜொஸ் பட்லர் (8), தேவ்தத் படிக்கல் (7), ரவிச்சந்திரன் அஷ்வின் (17), அணித் தலைவர் சஞ்சு செம்சன் (27), டெரில் மிச்செல் (16) ஆகிய ஐவர் ஆட்டமிழக்க 15ஆவது ஓவரில் ராஜஸ்தானின் மொத்த எண்ணிக்கை 99 ஓட்டங்களாக இருந்தது.

ஆனால், ரியான் பரக், தனி ஒருவராக போராடி 31 பந்துகளில் 4 சிக்ஸ்கள், 3 பௌண்ட்ரிகளுடன் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களைப் பெற்று ராஜஸ்தான் றோயல்ஸ்



போராடக்கூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற உதவினார்.

மத்திய மற்றும் பின்வரிசையில் வேறு எவரும் இரு வரிசை இலக்க ஓட்டத்தைப் பெறவில்லை.

பந்துவீச்சில் ஜொஷ் ஹஸல்வூட் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் வனிந்து ஹசரங்க டி சில்வா 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் மொஹமத் சிராஜ் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

145 ஓட்டங்கள் என்று இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் 19.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

ஆரம்ப வீரராக மீண்டும் களம் புகுந்த விராட் கோலி வழமை போலவே ஏமாற்றினார். அவர், 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமை அணிக்கு தாக்கத்தைக் கொடுத்தது. அதன் பின்னர் விக்கெட்கள் சீரான இடைவெளியில் சரிந்த வண்ணம் இருந்தன.

அணித் தலைவர் டு பிளசிஸ் (23), ரஜாத் பட்டிதார் (16), ஷபாஸ் அஹ்மத் (17), வனிந்து ஹசரங்க டி சில்வா (18) ஆகிய நால்வரே இரு வரிசை இலக்க ஓட்டத்தைப் பெற்றனர்.

க்ளென் மக்ஸ்வெல் (0), தினேஷ் கார்த்திக் (6) ஆகிய இருவரும் மீண்டும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர்.

பந்துவீச்சில் குல்தீப் சென் 3.3 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ரவிச்சந்திரன் அஷ்வின் 4 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ப்ராசித் கிருஷ்ணா 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



## 1000 ஓட்டமற்ற பந்துகள் பிராவோ புதிய சாதனை

மும்பை, ஏப். 28

ஐ.பி.எல். வரலாற்றில் அதிக விக்கெட்களைக் கைப்பற்றியவராக திகழும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரரான டுவைன் பிராவோ 1000 ஓட்டமற்ற பந்துகளை (டொட் போல்) வீசியவர் என்ற மைல் கல்லை அடைந்தார்.

மேலும், இந்த மைல்கல்லை எட்டிய 13 ஆவது ஐ. பி. எல். வீரராகவும் பிராவோ பதிவானார். ஐ.பில்.எல். அரங்கில் அதிக ஓட்டமற்ற பந்துகளை வீசியவராக சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் புவ்னேஷ்வர் குமார் விளங்குகிறார்.

139 இனிங்ஸ்களில் 516 ஓவர்கள் பந்துவீசியுள்ள புவ்னேஷ்வர் குமார் 1341 பந்துகள் ஓட்டமற்ற பந்துகளாக வீசியுள்ளார்.

இவருக்கு அடுத்தப்படியாக கொல்கத்தா நைற்ரைடர்ஸ் அணியின் சுனில் நரைன் (1331), ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் ரவிச்சந்திரன் அஸ்வின் (1329) ஆகியோர் காணப்படுகின்றனர்.

முதலிடத்திற்காக இவர்கள் மூவர்கள் இடையில் பலத்த போட்டி நிலவி வருகிறது.

இதன் 4 ஆவது முதல் 8 ஆவது இடம் வரையில் ஐ.பி.எல். கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றுள்ள வீரர்கள் உள்ளமை கவனிக்கத்தக்கது. இதில் ஹர்பஜன் சிங் (1268), லசித் மாலிங்க (1155), அமித் மிஷ்ரா (1154), பியூஷ் சாவ்லா (1151), பிரவீன் குமார் (1076) ஆகியோர் காணப்படுகின்றனர். தற்போது ஐ.பி.எல். அரங்கில் விளையாடிவரும் உமேஷ் யாதவ் (1055) 9 ஆவது இடத்தையும், ஜஸ்பிரீட் பும்ரா (1049) 10 ஆவது இடத்தையும் வகிப்பதுடன், ரவீந் திர ஜடேஜா (1037), டேல் ஸ்ரெய்ன் (1022) ஆகியோர் இந்த மைல்கல்லை எட்டிய ஏனைய வீரர்களாக உள்ளனர். (ஐ)



## விம்பிள்டனில் பங்கேற்க ஜொகோவிச்சுக்கு வாய்ப்பு

லண்டன், ஏப். 28

கோவிட் - 19 தடுப்பூசி ஏற்றுக்கொள்ளாதவர்கள் இந்த வருட விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதன்மூலம் நடப்பு விம்பிள்டன் சம்பியன் நொவாக் ஜொகோவிச் தனது சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஆடவர் ஒற்றையருக்கான உலக ரென்னிஸ் தரவரிசையில் முதலாம் இடத்தில் உள்ள 34 வயதான சேர்பிய வீரர் ஜொகோவிச்சுக்கு, இந்த வருடம் நடைபெற்ற அவுஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டியில் பங்குபற்ற முடியாமல் போனது. 2022 அவுஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டி யில் நடப்பு சம்பியனாக பங்குபற்றுவதற்காக அவுஸ்தி ரேலியா சென்றிருந்த ஜொகோவிச், தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாததால் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட் டிருந்தார்.

எவ்வாறாயினும் "ஐக்கிய இராச்சியத்திற்குள் நுழைவதற்கு அரசாங்கம் வகுத்துள்ள விதிகளில் கோவிட் - 19 தடுப்பூசி ஏற்றியிருக்க வேண்டியது கட்டாயம் என்பது சேர்க்கப்படவில்லை" என ஊடக சந்திப்பில் அகில இங்கிலாந்து லோன் ரென்னிஸ் கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சாலி போல்டன் தெரிவித்துள்ளார்.

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகள் ஜூன் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை மாதம் 10ஆம் திகதி நிறைவடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இங்கிலாந்து செல்கிறது இலங்கை கிரிக்கெட் அணி!

கொழும்பு, ஏப். 28

இலங்கை அணி இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இதன்படி, 3 போட்டிகளை கொண்ட ஒரு நாள் தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட 4 நாள் போட்டி, இருபது - 20 கிரிக்கெட் போட்டித் தொடர்களில் பங்கேற்பதற்காக வளர்ந்து வரும் இலங்கை அணி எதிர்வரும் மே மாதம் இங்கிலாந்து செல்கின்றது.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி இங்கிலாந்து நோக்கி பயணமாகவுள்ள இலங்கை வளர்ந்துவரும் அணி முதலில் மூன்று போட்டிகள் கொண்ட 4 நாட்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது.

இதன் முதலாவது போட்டி கென்ட் பிராந்தியத்தின் கேன்டர்பரியில் மே 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரின் இரண்டாவது போட்டி மே 13ஆம் திகதியன்று ஹேம்ப்ஷயாரிலும், மூன்றாவது போட்டி மே 20 ஆம் திகதியன்று சர்ரேவிலும் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடர் நிறைவடைந்ததன் பின்னர், 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி மே 25 இல் நடைபெறும். இரண்டாவது போட்டி மே 27 இலும், மூன்றாவது போட்டி மே 29 இலும் நடைபெறவுள்ளன. (ஐ)

## முன்னாள் கிரிக்கெட் வீரர்களை ஒன்றிணைக்கிறார் சகீட் அப்ரிடி!

இஸ்லாமாபாத், ஏப். 28

மூத்த கிரிக்கெட் வீரர்களுக்கென தனியான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் சகீட் அப்ரிடி அறிமுகப்படுத்தவுள்ளார். இளம் வீரர்களுக்கு பாகிஸ்தான் சுப்பர் லீக் இருக்கின்றது.

அதேபோன்று வயதில் மூத்த வீரர்களுக்கு மெகா ஸ்ரார்ஸ் லீக் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். "உலக கிரிக்கெட் அரங்கில் பல்வேறு லீக் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தியன் பிறீமியர் லீக், பாகிஸ்தான் சுப்பர் லீக், கரீபியன் பிறீமியர் லீக் உட்பட பல்வேறு நாடுகளில் இருபது 20 கிரிக்கெட் போட்டிகள் அரங்கேற்றப்படுகின்றன. இவை அனைத்திலும் இளம் வீரர்கள் அசத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் விளையாடி தற்போது ஓய்வுபெற்றுள்ள வீரர்களை இணைத்துக் கொண்டு மெகா ஸ்ரார்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியை நடத்தவுள்ளேன்" என அப்ரிடி தெரிவித்தார்.

"பொழுதுபோக்கு ரீதியாக மெகா மெகா ஸ்ரார்ஸ் லீக் தொடர் நடத்தப்படும். ராவல் பிண்டியில் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படும் இப் போட்டி பத்து - ரி -10 கிரிக்கெட் போட்டியாக அமையும். முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், முன்னாள் விளையாட்டு வீரர்கள், முன்னாள் விளையாட்டுத்துறை ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு நிதி உதவி அளிப்பதை நோக்காகக்கொண்டே இப் போட்டி நடத்தப்படவுள்ளது" என்றார் அப்ரிடி.

இந்த சுற்றுப் போட்டியில் 6 அணிகள் விளையாடவுள்ளன. இப்போட்டியில் வெளிநாடுகளைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் விளையாடுவர். எனக்கு வயதாகி விட்டது. எனவே நானும் மெகா மெகா ஸ்ரார்ஸ் லீக்கில் விளையாடுவேன். முஷ்டாக் அஹ்மத், இன்ஸமாம்-உல்-ஹக், வக்கார் யூனிஸ் ஆகியோரும் இப் போட்டியில் விளையாடுவர்" என அப்ரிடி மேலும் குறிப்பிட்டார். (ஐ)



# ராணுவத்தால் வீட்டுத்திட்டத்துக்கு புலோலியில் அடிக்கல் நாட்டிவைப்பு

வடமராட்சி, ஏப். 28

பருத்தித்துறை புலோலி வடக்கில் குறைந்த வருமானம் பெறும் குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் வீடு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட வுள்ளது.

கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர் வி.எஸ்.நட ராசாவின் ரூபா 17 இலட்சம் நிதி உதவியின் கீழ் திரு திருமதி தங்கராசா தர்மராணி குடும்ப தினருக்கு வீடு ஒன்றினை கட்டிக் கொடுப்பதற்க்காக நேற்று அடிக்கல் நாட்டி வைக் கப்பட்டுள்ளது.

அடிக்கல்லை 551 ஆவது காலாட்படை படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சிந்தக விக்ரமசிங்க, பருத்தித் துறை உதவி பொலிஸ் அத்தி யட்சகர், பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் நாட்டிவைத்தனர்.

இதில் இலங்கை இலகு காலாட்படையின் 16 ஆவது படைணியினர், பருத்தித்துறை பிரதேச செயலக அதிகாரிகள், பயனாளி குடும்பம மற்றும் பல ரும் கலந்து கொண்டனர்.(அ-02)

# முஸ்லிம் பிரதிநிதிகளையும் சந்தித்தார் அமெரிக்க தூதர்

யாழ்ப்பாணம், ஏப். 28

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் யாழ். மாவட்ட முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறியும் நோக்கில் மக்கள் பணிமனையின் தலைவர் மௌலவி எஸ்.ஏ.சுபியானுடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

நாவாந்துறை வீதியில் அமைந்துள்ள மக்கள் பணி மனை அலுவலகத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதில் மீளக்குடியேறியுள்ள மக்களுக்கான காணி இல்லாத பிரச்சனை, காணி இருந்தும் வீட் டுத்திட்டம் இல்லாத பிரச்சனை, வாழ்வாதாரம் இல் லாத நிலை தொடர்பாக




சுட்டிக்காட்டப்பட்டதுடன் மகஜரும் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னர் உள்ள அரசாங்கமோ தற்போதுள்ள அரசாங்கமோ கருத்திற்கொள்ளவில்லை. இது தொடர்பாக முஸ்லிம் வாழ் சமூகத்தினர் புறக்கணிக்கப் பட்டு வருகின்றோம் என யாழ் முஸ்லிம் மாவட்ட மக்கள் பணி மனையின் தலைவர் மௌலவி எஸ்.ஏ.சுபியான் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். (அ)

# அலரி மாளிகைக்கு கடும் பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 28

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையின் பாதுகாப்பை தீவிரப்படுத்துவ தற்காக விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை முதல் பாதுகாப்பு நடவடிக்கை களை அதிகரிப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ட்ரக் மற்றும் பஸ்கள் பயன்படுத்தி அலரி




மாளிகையின் முன்பக்கத்தை மூடி பாதுகாப்பை தீவிரப்ப டுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மக்களின் ஆர்ப்பாட்ட நட வடிக்கைகள் தீவிரமடைந்துள் ளமையினால் பாதுகாப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. (அ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
22
-
11
-
1933



மறைவு
26
-
04
-
2022

## இலகுப்பிள்ளை றவுடேந்திரன்

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா Sydney ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இலகுப்பிள்ளை றவுடேந்திரன் அவர்கள் 26.04.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிட்னியில் காலமானார்.

அன்னார், இலகுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மக னும், பொன்னையா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமக னும், காந்தமதி அவர்களின் அன்புக் கணவரும்,விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, விக்னராஜா, விக்னரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும்,கலாவதி, குமரகுருபரன், உமா ஆகியோரின் மாமனாரும், கவிஜா, கவிசாந், ஜனார்த்தன், ஜனாதினி, கேசவி, கேசவன் ஆகி யோரின் பாசமிகு பேரனும்,விஜயபாலன்(பிரித்தானியா), விஜய குமாரி (பிரித்தானியா), காலஞ்சென்றவர்களான செல்வரஞ்சிதம், விஜயரட்ணம், விஜயலஷ்மி, ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

கிரியை
Saturday, 30 Apr 2022 10:30 AM - 12:30 PM
Pinegrove Memorial Park & Crematorium Kington St, Minchinbury NSW 2770, Australia

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**விக்னா - மகன்** Mobile : +61433835129
**ராஜன் - மகன்** Mobile : +61414318636
**குகன் - மருமகன்** Mobile : +61433498652

தகவல் :
**ராஜன் (மகன்)**

# கொத்து ரொட்டி விலை உயரும்!

கொழும்பு, ஏப். 28

சமையல் எரிவாயு விலை அதிகரிப்புக்கு அமைய, சிற்று ணவகங்களில் விலை அதிக ரிப்பை மேற்கொள்வது குறித்த தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு அதன் உரிமையாளர் களுக்கே வழங்குவதாக சிற்று ணவக உரிமையாளர்கள் சங்கத் தின் பிரதான செயலாளர் அசேல சம்பத் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டமையால், தேநீர், பால் தேநீர், உணவுப் பொதி, அப்பம், ரொட்டி, கொத்து உட்பட சிற்றுண்டிக ளின் விலைகள் அதிகரிக்கும் என கொழும்பு ஊடகம் ஒன் றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

ஆனாலும், உணவுப் பொருட்களின் விலை அதிக ரிக்கப்பட்டால், சிற்றுணவக தொழிற்துறை வீழ்ச்சியடையும். இது பாரிய பிரச்னையாகும்.

எனவே, சமையல் எரிவாயு வின் விலை அதிகரிக்கப் பட்டதை அடுத்து, தங்களது தொழிற்துறையை முன்னெடுத் துச் செல்லக்கூடிய வகையில் தாங்கள் விரும்பியவாறு விலை அதிகரிப்பை மேற்கொள்ளு மாறு சிற்றுணவக உரிமையா ளர்களுக்கு பொறுப்பளிக்கப் பட்டுள்ளது.

ஏனெனில், தாங்கள் விலை அதிகரிப்பை மேற்கொண்டால், உண்மையில் இந்த தொழிற் துறை வீழ்ச்சியடை யும்-என் றார். (அ)

# கட்டடம் ஒன்றில் இருந்து கீழே விழுந்தவர் மரணம்

கொழும்பு, ஏப். 28

கொழும்பு வெள்ளவத்தை நகரில் டப்ளியூ.ஏ.சில்வா மாவத்தை பகுதியில் நிர்மாணிக் கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றில் தொழில் புரிந்து வந்த ஊழியர் கீழே விழுந்து உயிரி ழந்துள்ளார்.

இந்த கட்டடத்தில் மூன்றா வது மாடியில் மின் தூக்கிக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் இருந்து இந்த ஊழியர் தவறி கீழே விழுந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று காலை நடந்துள்ளது. வெள்ளவத்தை யில் தற்காலிகமாக வசித்து வந்த 47 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் பெயர் விவரங்கள் வெளியாகவில்லை. சம்பவம் குறித்து வெள்ள வத்தை பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் - திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலய வரு டாந்த அலங்கார உற்ச வத்தை முன்னிட்டு கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப் பில் சிறப்பு சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

ஆலயத்தின் பிரதான மண் டபத்தில் இடம்பெறும் இந்த சொற்பொழிவுகளை இளம் சைவப்புலவர் ச. நவநீதன் வழங்கவுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு "ஆலய தரிசனம்" என்னும் விடயப்பொருளிலும், திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு

"இறைவனின் அருள் சுரக் கும் இடம் ஆலயம்" என்னும் விடயப்பொருளிலும் இடம் பெறவுள்ளன. (ஐ)

## என்னை பதவி...

வதற்காக மக்கள் எமக்கு ஆணையை வழங்கவில்லை. எம் மீதான நம்பிக்கை மக்களுக்கு உண்டு” என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

நேற்று உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களை அலரி மாளிகையில் சந்தித்து பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அனைவரும் நன்கு அறிவார்கள். பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொள்ள நேரிட்டுள்ளது. வரலாற்று ரீதியில் இருந்து தாக்கம் செலுத்திய பல்வேறு காரணிகளால் தற்போது இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. நெருக்கடியான நிலையில் இருந்து நாட்டு மக்களை மீட்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே, அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

‘சகல துறைகளிலும் வீழ்ச்சியடைந்த அரசாங்கத்தையே பொறுப்பேற்றோம். பொருளாதாரம் உட்பட தேசிய பாதுகாப்பின்மீது நாட்டு மக்கள் அப்போது நம்பிக்கை கொள்ளவில்லை. அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதம் இல்லாத - குண்டு வெடிக்காத நாட்டையே மக்கள் கோரினார்கள். மக்களின் கோரிக்கையை நிறைவேற்றியுள்ளோம். கோவிட் தாக்கத்தை சிறந்த முறையில் எதிர்கொண்டுள்ளோம். சவால்களுக்கு முகம் கொடுப்பது எமக்கு புதிதல்ல, அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் பல சவால்களை வெற்றிக்கொண்டுள்ளேன். கோவிட் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்துள்ளமை சிறந்த வெற்றியாகும்.

“சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகளை செயல்படுத்தி முன்னேற்றமடைய வேண்டும். பதவி விலகுமாறு ஜனாதிபதி ஒருபோதும் என்னிடம் குறிப்பிடவில்லை. குறிப்பிடவும் மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது”, என்றார். (ஐ)

## பாராளுமன்றுக்கு...

ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சபாநாயகரை பதவி நீக்கம் செய்வதற்கான நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சமர்ப்பிக்கவுள்ளோம்.

சபாநாயகர் நீக்கப்பட்ட பின்னர் புதிய சபாநாயகர் ஒருவர் நியமிக்கப்படுவார். அதன் பின்னர் பிரதி சபாநாயகர் நியமிக்கப்படுவார்.

இதன் பின்னர் பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அரசாங்கம் தோற்கடிக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

## கோட்டாபயவும்...

போராடும் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க நாட்டின் ஜனநாயகத்தைச் சீரழித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஒரேநேரத்தில் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.”

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

மேலும், “கோட்டாபயவும் மஹிந்தவும் பதவி விலக வேண்டும் எனக் கோரியே ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும் அலரி மாளிகைக்கு முன்பாகவும் இரவு பகலாக மக்கள் போராடி வருகின்றனர். மக்கள் ஆணையின் பிரகாரம் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியும் பிரதமரும் மக்களின் இந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்க வேண்டும்.

காலம் தாழ்த்தாது கௌரவமாக இருவரும் பதவி விலகி புதிய ஆட்சிக்கு வழிவிட வேண்டும். பிரதமர் மஹிந்தவை மட்டும் பதவி விலக்கி ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் இடைக்கால அரசு அமைந்தால் அதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மக்கள் போராட்டங்கள்தான் மேலும் வீரியமடையும்.

எனவே, மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டின் ஜனநாயகத்தைச் சீரழித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் உடனடியாகப் பதவி விலக வேண்டும். இல்லையேல் பெரும் விளைவுகளை இருவரும் சந்திக்க வேண்டிவரும்.

சிறீ லங்கா பொதுஜன முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் இரட்டை வேடத்தில் இருப்பதால் பாராளுமனத்தில் பிரேரணைகள் மூலம் அரசையும் ராஜபக்ஷக்களையும் கவிழ்ப்பது எந்தளவுக்குச் சாத்தியம் என்று இப்போது சொல்ல முடியாது. எனினும், பிரேரணைகள் வாக்கெடுப்புக்கு வந்தால் ஆளும் - எதிரணி பாராளுமன்ற உறுப்பி னர்கள் பலரின் உண்மை முகங்களை அறிந்து கொள்ள முடியும்” - என்றார். (ஐ)

## தொழில்சங்க...

மைப்பு முழுமையான ஆதரவை தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான ம. ஆ. சுமந்திரன் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மக்கள் போராட்டத்திற்கு தமது ஒத்துழைப்பை வழங்கும்முகமாக நாளையதினம் (இன்று) ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார் தொழில்சங்கங்கள் நாடுதழுவிய ரீதியிலான ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளன.

இதற்கு ஆதரவைத் தெரிவித்தும் அரசுக்கு தொடர்ச்சியான அழுத்தத்தை வழங்கும்முகமாகவும் இந்த வேலை நிறுத்தத்தில் பங்குகொள்ளுமாறு அனைத்து தொழில்சங்கங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டிநிற்கிறது - என்றுள்ளது. (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

இடம்பெறுகின்றது.

இந்த போராட்டங்கள் ஜனநாயக ரீதியான போராட்டம் என்பதால் எவரையும் கைது செய்யவில்லை. அந்த வகையில் நாமும் இதனை வரவைற்பதோடு போராட்டத்துக்கான ஆதரவை தெரிவிக்கின்றோம்.

அத்துடன் ஜனநாயக ரீதியான இப்போராட்டத்தில் தமிழ் மக்களுக்கு யுத்த காலத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதனைச் சகோதர சிங்கள மக்களும் தெரிவித்து வருகின்றனர். இது இந்த நாட்டில் ஏற்பட்ட பாரிய மாற்றமாகும்.

இந்நிலையில் தமிழ் மக்களின் மனங்களில் புரையோடிப்போயுள்ள யுத்த வலிகளை நினைவு கூர்ந்து-யுத்தத்தால் மரணித்த தமிழர்களை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டு அம் மக்களுக்காக அஞ்சலி செலுத்த அழைத்து நிற்கின்றேன்-என்றார். (அ)

## மிகக்குறைந்த...

தீர்வு காண முடியும். இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளேன்.

“இடைக்கால தேசிய அரசாங்கம் விரைவில் அமைக்கப்பட வேண்டும். கட்சி பேதங்களை ஒதுக்கி விட்டு மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

“தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண மலிவு விலையில் போதுமான எரிபொருளை ரஷ்யா வழங்க முடியும் என்று அந்த நாட்டு பிரதிநிதிகள் எழுத்து மூலம் எனக்கு அறிவித்துள்ளனர்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பெரமுன பணிமனை திறப்பு விழா!



கொழும்பு, ஏப். 28

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகம் நேற்று திறக்கப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் உணவகத்துக்கு முன்பாக உள்ள ஒரு கொள்கலனில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டது.

திறப்புவிழா, பொதுஜன பெரமுன கட்சியின் தொழில்சங்கப் பிரதிநிதியான ஜஃப்மா என்ற சந்திமா தலைமையில் நடைபெற்றது.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் இவ்வாறான ஓர் அலுவலகம் அமைக்கப்பட்டமை கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள், பணியாளர்களை கடுமையாக விமர்சித்து உள்ளனர்.

அத்துடன், பொதுஜன பெரமுன கட்சியை பலப்படுத்துவதற்கு இவ்வாறான செயல்பாடுகளை மேற்கொள்வதை விடுத்து நாட்டை கட்டி எழுப்புவதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

## அமெரிக்கத்...

இதன்போது, யுஎஸ்எயிட் அனுசரணையுடன், யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தால் நடத்தப்படும் சமாதானமும், முரண்பாடுகளுக்கான தீர்வுகளும் என்ற முதுமாணிக் கற்கை நெறிக்கான அனுசரணையாளர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்கத் தூதுவர் முன்னிலையில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும், யுஎஸ் எயிட் நிறுவன அதிகாரிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இதன்போது, பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், யுஎஸ்எயிட் நிறுவன அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஐ)

## பணிப்...

இதனால், வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இன்று சுகவீன விடுமுறையை அறிவித்து போராட்டத்தில் பங்கெடுக்குமாறு மேற்படி சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு அறிக்கை ஒன்றையும் நேற்று வெளியிட்டுள்ளது. (ஐ)

## இரணைமடுவில்...

பெற்றது.

இதன்போது போராட்டக்காரர்கள் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டம் இரணைமடு சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அனைத்து...

டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அமைச்சரவை பதவி விலகிய பின்னர், அமைப்பதற்கு உத்தேசிக்கப்படும் சர்வ கட்சி அரசின் வியூகம், அந்த அரசாங்கத்தில் பொறுப்புகளை வகிக்கக்கூடிய நபர்கள், அந்த அரசு செயல்படக்கூடிய கால எல்லை ஆகியன தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக ஜனாதிபதி தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் விசேட கூட்டம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கும், அரசாங்கத்துக்கான ஆதரவை விலக்கி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் கட்சிகளின் தலைவர்களுக்குமே இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு தீர்வைகாண சர்வக்கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு மகாநாயக்க தேரர்கள், பேராயர் உட்பட ஆன்மீக தலைவர்களும், சில அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புகளும் கோரிக்கை விடுத்திருந்தன. இதற்கமையவே கொள்கை அடிப்படையில் தான் இந்த முடிவை எடுத்தார் என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## எகிறும்...

கொழும்பு - காலிமுகத்திடலில் இளைஞர்கள் ஒன்றிணைந்து கோட்டா கோ கம என்று பெயரிட்டு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர். கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டம் இன்றுடன் 19 நாட்களை எட்டியுள்ளது.

இந்நிலையில், காலிமுகத்திடலில் இடம்பெறும் போராட்டக்காரர்களை கண்காணிப்பதற்காக பொலிஸ் திணைக்களம் ஆயிரத்து 500 பொலிஸாரை அந்தச் சூழலில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

இவர்களின் உணவுக்காக நாள் ஒன்றுக்கு ஒரு கோடியே 70இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறதாம். இதில், படைத்துறை மற்றும் படைத்துறை புலனாய்வு பிரிவினர்களுக்கான செலவுகள் உள்ளடக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாடு முழுவதும்...

அரச, அரசசார்பற்ற தனியார் துறை, பெருந்தோட்டத்துறை உள்ளிட்ட அனைத்து பிரிவினரும் இன்றைய பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தொழில்சங்கங் களின் இணைப்பு அலுவலகத்தின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஆசிரியர்களின் தொழில்சங்க நடவடிக்கை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்ராலின் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவித்தார்.

பாடசாலைகளில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அசிரியர் பற்றாக்குறை இருப்பதாகவும், மக்களின் வாழ்வுரிமையைக் கூட அரசாங்கம் வழங்கவில்லை எனவும் ஜோசப் ஸ்ராலின் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு உணவுகூடக் கிடைக்காத சூழ்நிலையில்தான் அரசாங்கத்திற்கு எதிராக வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்ததாக அவர் மேலும் கூறினார்.

இதனிடையே, இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழில்சங்க நடவடிக்கையில் கிழக்கு பல்கலைக்கழகமும் யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து கொள்வதாக அவை அறிக்கை மூலம் தெரிவித்துள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மண்ணெண்ணெய் வாங்குவதற்கு 5 மணி நேரம் காத்திருந்தவர் பலி!

ஹற்றன், ஏப். 28

மண்ணெண்ணெய் பெறுவதற்காக 5 மணித்தியாலங்களுக்கு மேல் வரிசையில் காத்திருந்து வீடு திரும்பியவர் உயிரிழந்தார்.

ஹற்றன் - தும்புறுகிரிய வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தேவநாயகம் கிருஸ்ணசாமி (வயது 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தகரான அவர் ஹற்றன் நகரில் வாடகை கட்டடமொன்றில் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்துள்ளார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்ற அவர், வரிசையில் நின்று மண்ணெண்ணெயைப் பெற்று இரவு 11 மணியளவில் வீடு திரும்பினாரென அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

பின்னர் தனக்கு அதிகம் சோர்வாக இருப்பதாக கூறிய அவர், வாந்தி எடுத்தாரென்றும் அதைத் தொடர்ந்து நித்திரைக்கு சென்ற அவர் அதிகாலையில் உயிரிழந்தார் என்றும் அவர் மேலும் கூறினார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு;

## பொலிஸாரை உடன் கைது செய்ய உத்தரவு!

கொழும்பு, ஏப். 28

ரம்புக்கனையில் இடம்பெற்ற போராட்டத்தின் போது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட மற்றும் அதற்கு உத்தரவு வழங்கிய சகல பொலிஸாரையும் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கேகாலை நீதிவான் நீதிமன்றினால் இந்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களின் சட்டவைத்திய பரிசோதனைகளில் அவர்களது காயங்கள் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டது என உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளை உடனடியாகக் கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
24 - 07 - 1940



மறைவு
27 - 04 - 2022

### தில்லைநாதர் சண்முகதாஸ்

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட தில்லைநாதர் சண்முகதாஸ் அவர்கள் 27.04.2022 புதன் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தில்லைநாதர், கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவரத்தினம், நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சோமசேகரம், திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசரஸ்வதி, காலஞ்சென்ற வசந்தகுமாரி ஆகியோரின் அன்புக் கணவரும், கிருபாமூர்த்தி (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயகுமார், கிருபாநந்தன் (லண்டன்), கிருபாநந்தினி (இலங்கை), கிரிசா (கனடா), பாரதா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு அப்பாவும், சியாமளாதேவி(பிரான்ஸ்), துளசி (பிரான்ஸ்), கலைச்செல்வி(லண்டன்), கிருபாகரராசா (இலங்கை), செல்வச்சந்திரன்(கனடா), இலங்கேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற பஞ்சாச்சரம், கமலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கிசாந்த், கிசானி, திவியா, கவியா, தருண், மதுமிதா, தரிக்ஷா, பவிக்ஷா, யனிஸ்கா, கிசோபன், யுவேகா, துலக்சன், சுதன், சுவர்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கருதடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கிருபாநந்தன் (மகன்)**

தொடர்புகளுக்கு:
**கிருபாநந்தினி (பாப்பா) - மகள்** Mobile : +94776996425
**கிருபாமூர்த்தி (ராசன்) - மகன்** Mobile : +33766537790
**கிருபாநந்தன் - மகன்** Mobile : +447737232560
**கிரிசா - மகள்** Mobile : +16478247794

## ரயில்வே ஊழியர்களும் இன்று வேலைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 28

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்களை வலுப்படுத்தும் நோக்கில் நேற்று நள்ளிரவு முதல் அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த அடையாள வேலை நிறுத்தத்தை இன்று நள்ளிரவு வரை தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கம், ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம், லோகோமோட்டிவ் ஒப்பரேட்டிங் இன்ஜினியர் யூனியன், ரயில்வே ஊழியர் சங்கம், ரயில் தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட ரயில்வே தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கமைய அனைத்து ஊழியர்களும் வேலை நிறுத்த போராட்டத்துக்கு ஆதரவு அளிக்கவுள்ளனர். (அ)

## இ.போ.ச. பஸ் சேவை இன்று வழமைபோல்

கொழும்பு, ஏப். 28

நாடளாவிய ரீதியில் பல தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று போராட்டம் மற்றும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், தமது பஸ்கள் வழமை போல் சேவையில் ஈடுபடும் என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை போக்குவரத்துச் சபை தொழிற்சங்கத்தினர், வழமைபோல இன்று சேவையில் ஈடுபடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக இ.போ.ச தலைவர் தெரிவித்தார். (அ)

## வளங்களை சூறையாடியவர்களை அம்பலப்படுத்துவதற்கு நடவடிக்கை

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்

வாஷிங்டன், ஏப். 28

இலங்கையின் வளங்கள் சூறை யாடப்பட்டமைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக இலங்கையர்கள் சிலரை சந்தித்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஸ்ரீவன் ஹோர்ஸ்போர்ட் தெரிவித்துள்ளார்.

நிவாடா மாநிலத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் ஸ்ரீவன் ஹோர்ஸ்போர்ட் ஜனாதிபதி ஜோ பைடனின் ஜனநாயகக் கட்சி உறுப்பினராவார்.

இலங்கையை ஆட்சி செய்யும் ஒரு குடும்பம் காரணமாக இலங்கை வங்கு ரோத்து நிலையை எதிர்நோக்கியுள்ளமை தொடர்பாக அமெரிக்க தலைவர்களை தெளிவுபடுத்துவதாக ஸ்ரீவன் ஹோர்ஸ் போர்ட் உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் வளங்கள் சூறையாடப் பட்டமைக்கு பொறுப்புக்கூற வேண்டி யவர்களை அமெரிக்க காங்கிரஸ் சபையு டன் இணைந்து அம்பலப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கும் எனத் தான் நம்புகிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

## புத்தகத் திருவிழா!

யாழ்ப்பாணம், ஏப். 28

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் அனைத்துலக புத்தக தினத்தை முன்னிட்டு புத்தகத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை, நாளை மறுதினம் சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

புத்தக விற்பனை மற்றும் கண்காட்சியுடன் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சி 209 பலாலி வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் இடம்பெறும். (ஐ)




## 200 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி

மன்னார், ஏப். 28

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தினால் 200 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்த உலருணவு பொதிகளின் ஒரு பகுதி மாவட்ட செயலகத்தில் வைத்து பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனன், கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த உலருணவு பொதிகள் 3500 ரூபா பெறுமதியானது எனவும், கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் பிரதேச செயலாளர்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.